உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

ர் 19] சார்வரி ஆண்டு வைகாசித்திங்கள் 10—6—60 [இதழ் 7



திருக்கோகர்ணம் சுவாமி விமானம்

உ

குருபாதம்

“ ஞானசம்பந்தம் ”

ஆசிரியர் :- **வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்**

துணை ஆசிரியர் :- வித்துவான். மூத்து. சு. மாணிக்கவாசகன்

உட்பொருள்

		பக்கம்
1.	சிவ ஞான போதம்	363
2.	அம்மையார் மாட்சி	368
3.	இரண்டாம் இராசாதிராசனது திருவொற்றியூர்க் கல்லெழுத்து	372
4.	பழந்தமிழ் நூல்களில் உயிர் வகைகள் ...	377
5.	திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு	381
6.	உடல் வளர்க்கும் மூலிகைகள்	388
7.	கோயில்களும் மடங்களும்	391
8.	செய்திகள்	397
9.	எதிர்காலம்	407

அட்டைப்பட விளக்கம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருக்கயிலாய தரிசன யாத்திரைக்குப் பின்னர் துவாதசஜோதிர்லிங்க தரிசனம் செய்தருளியபோது திருக்கோகரணத்திற்குச் சென்று வழிபட்டார்கள். இத் தலம் சைவ சமயாசாரியர்களுள் திருஞானசம்பந்த சுவாமிகள் திருநாவுக்கரசு சுவாமிகள் ஆகிய இருவருடைய பாடலும் பெற்ற சிறப்புடையது.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்தமான
சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில்



திருமுலைப்பால் திருவிழாவில் சிவிகையில் எழுந்தருளும்
திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளை
25ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
வழிபடுதல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள்
ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானத்திற்கு அமைச்சர்கள் வருகை



சென்னை மாநில முதல் அமைச்சர் கனம். திரு. கே. காமராசர் அவர்களும்
கனம். திரு. ஆர். வேங்கட்டராமன் அவர்களும்

உ

வாழ்க உலகெலாம்

ஞானசம்பந்தம்

[தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 19 | சார்வரி - வைகாசி 10—6—60 | இதழ் 7

உ

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் ! பிஞ்ஞகா ! பிறப்பிலீ !
கொன்றையம் முடியினாய் ! கூடலால வாயிலாய் !
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

சிவ ஞான போதம்

[கட்டுரை 17]

(மலர் 19, இதழ் 6, பக்கம் 317 இன் தொடர்பு)

வினா :- (முன்னைத் திருவெண்பாவில் உரைத்த) வினை ஆதியோ ? அநாதியோ ?

விடை :- ஆதி.

வினா :- ஆதி எனின் முன்னர் இல்லாதது இடையே தோன்றும் என்பது ஆகும். தோன்றுவதே ஆதியுடையது. அஃதாவது ஆதியுள்ளதேல் தோற்றம் உடையதாகும்.

தோற்றம் உடையதேல் ஆதியுள்ளதாகும். ஆதி ஆனால், சற்காரியவாதத்துக்கு ஏலாது.

விடை :- அநாதி.

வினா :- அநாதி என்றால் ஒருவர் கூட்டவேண்டுவ தில்லை. அஃதாவது ('காந்தபசாசம்போல்') ஒருவன் எடுத்து நேர் ஒக்கப் பிடித்தவழி இரும்பைக் காந்தம் வலித்துக் கோள்ளுதல் போல முதல்வன் வினைப்பயன்களைப் பிறழாமல் நுகர்விக்கும் வழி உயிர்கள் வினைப்பயன்களை நுகரும் என்பது வேண்டா. உயிர்களது வினைப்பயனுகர்ச்சி அநாதி எனின் இறைவன் நுகர்வித்தல் பற்றி உளதாகும் ஆதி இல்லை என்றதாம். ஆகவே எவ்வாறு அநாதியாம்?

விடை :- நெல்லின்கண் உமி இடையே உற்றது அன்று. நெல் உள்ள அன்றே உமியும் உளது. செம்பினிடத்துக் களிம்பு இடையே உற்றது அன்று. செம்பு உள்ள அன்றே களிம்பும் உளது.

> "நெல்லிற் குமியும் நிகழ்செம்பி னிற்களிம்பும்
> சொல்லிற் புதிதன்று தொன்மையே—"

வினா :- இஃது இங்கு ஏன் உரைக்கப்பட்டது.

விடை :- இஃது உவமை.

வினா :- எதற்கு உவமை ?

விடை :- உயிர்க்கும் வினைக்கும் (+ மாயைக்கும் ஆணவத்திற்கும்) உள்ள இயைபு தொன்மை என்று உணர்த்துவதற்கு.

வினா :- உவமேயம் கூறும் வெண்பாப் பகுதி எது ?

விடை :-

> "—வல்லி
> மலகன்மம் அன்றுளவாம் வள்ளலாற் பொன்வாள்
> அலர்சோகம் செய்கைமலர்த் தாம்."

வினு :- இப்பகுதி மாதவச் சிவஞான முனிவர் உரையிலும் அதற்குமுன் எழுதிய பழையவுரையிலும் கொண்ட பாடம்

" —வல்லி
மலகன்மம் அன்றுளவாம் வள்ளலாற் பொன்வாள்
அலர்சோகம் செய்கமலத் தாம். "

என்று உள்ளதன்றே ? இதில் இப்படிச் செய்கை ஏன் ?

விடை :- அச்சிற்றுரையில் ' கமலத்து ' என்றதற்குத் ' தாமரைப்பூ ' என்று உரையெழுதியுள்ளது. உரை முதல் வேற்றுமையில் உள்ளது. மூலம் ஏழன் வேற்றுமையில் உளது. அன்றியும் அவ்வுரை ' செய் ' என்னும் முதனிலையை (பகுதியை)ச் ' செய்தல் ' என்று தொழிற்பெயராகக் கொண்டுளது. அது தவருகாது. முதனிலையை ஈற்று நிலையுடன் கூடியவாறு வைத்துப் பொருளுரைத்தல் உண்டு. ,பெறுவது கொள்வாரும் கள்வரும் நேர' வர் எனக் கோடல் மரபேயாம். ஆயினும், இங்கு இவ்வாறு இடர்ப்படாவாறு மூலம் அமைந்திருக்கும்போது ஏன் இங்கனம் உரைத்தல் வேண்டும் ? சிற்றுரையிற் சொல்வகை செய்துகொண்டது

' கமலத்து அலர்சோகம் பொன்வாள் செய் ' என்றது. அதற்கு அவ்வெண்பாவில் ' பொன்வாள் அலர் சோகம் செய்கமலத்து ' என்றுளது.

வினு :- சொல்வகை ஏன் இவ்வாறு அமைந்தது ?

விடை :- தொன்மையதாம் பாடம் அகப்படாததும் இருந்த பாடத்தில் ஐயுறுதலும் ஆன்ருேர் தவறு செய்யாரென்னும் நம்புகை யாண்டும் நிலையாததும் பிறவும் தவருன பாடத்திற்குப் பொருத்தமான உரை எழுதுவதற்கு அடி (ஏதுக்) களாகும்.

வினு :- இங்குத் தொன்மையதாயுள்ள பாடம் எது ?

விடை :- சிவஞானபோதம் பாண்டிப்பெருமாள் விருத்தியில் உள்ள பாடம் :-

"—வல்லி
மலகன்மம் அன்றுளவாம் வள்ளலார் போன்வாள்
அலர்சோகம் செய்கைமலத் தாம்"

என்பதாகும்.

அதற்கு அவர் உரையாவது :- "விலங்காகிய கன்மமலமும் ஆணவமலமும் மாயாமலமும் அவைபோல அநாதியிலே உள்ளதாம். கர்த்தா இவையிற்றைச் செய்யுஞ்செயல், ஆதித்தனுடைய கிரணங்கள் அலர்வனவற்றை அலர்த்தியும் குவிவனவற்றைக் குவித்தும் செய்யுஞ் செயல் போலும். இப்படிச் செய்யவேண்டியது என்னை எனின், ஆணவமலத்தைப் புசிக்குதல் காரணமாக ஆம்........

ஆதித்தனுடைய சந்நிதியிலே அலர்வன அலர்ந்து குவிவன குவிந்துவர அவன் (-ஆதித்தன்) விகாரம் அற்று இருந்தாற்போலக் கர்த்தாவும் விகாரம் அற்றிருப்பது கூறினார். ஆதித்தனுடைய ஒரு கிரணம் பலவிதம் ஆனாற்போலக் கர்த்தாவினுடைய சிற்சத்தியும் பலவிதம்".

அவ்வுரையாசிரியர் 'வள்ளலார் (கர்த்தா)' என்றும் 'செய்கை' என்றும் உள்ள பாடத்தைக் கொண்டுரைத்தமை காண்க.

வினா :- 'வல்லி' என்றதற்குப் பொருள் என்ன?

விடை :- பழையவுரையிலே 'பெண்ணே' என்றும் 'வல்லி மகடூஉ முன்னிலை' என்றும், சிவஞான முனிவர் உரையில் 'மாயை' என்றும் 'மாயை இறைவனுக்குப் பரிக்கிரக சத்தியாகலின் வல்லியென்றார்' என்றும், பாண்டிப் பெருமாள் விருத்தியில் விலங்கு (ஆகிய கன்மமலமும் ஆணவமலமும் மாயாமலமும்) என்று உரைக்கப்பட்டுள்ளன.

வினா :- இத் திருவெண்பாவின் பொருளை விளக்குக.

விடை :- பொழிப்புரை :- நெல்லின்கண் உமியும் செம்பின்கண் களிம்பும் உளவாயின காலத்தை ஆராய்ந்து சொல்லின், அந்நெல்லும் செம்பும் உளவாயின அன்றே அவற்றோடு உமியும் களிம்பும் உள்ளன. இடையேவந்தன அல்ல. மாயை ஆணவம் கன்மம் என்னும் மும்மலமும் அநாதியே உள்ளனவாம். இடையில் வந்தன அல்ல. அம் மூன்றும் தன்தன் காரியங்களை முதல்வனால் செய்யுமே அன்றித் தாமே செய்யமாட்டா. எதுபோல என்றால், மலர்களை மலர்விப்பதும் குவிவிப்பதும் ஆகிய கதிரோனொளிபோல, அநாதியே உள்ள மும்மலங்களும் தத்தம் காரியங்களைச் செய்யுமாறு செய்விப்பது சிவசத்தியே.

பொன் - கதிரோன். வாள் - கதிரோனொளி. அலர் - மலர்தல். சோகம் - குவிதல். செய்கை - செய்தல். மலர்த்து - மலரின்கண்ணது. வள்ளலால் ஆம். வள்ளலார் ஆம் என்றபாடமும் பொருத்திக்கொள்ளப்படும். செய்கை மலர்த்து ஆம் என்றிருத்தல் வேண்டும்.

திரிபதார்த்தசிந்தனை 3 ஆவது பகுதி :-

" ஆன்மாவிற்கு ஆணவமலம் அநாதியியற்கையோ ? செயற்கையோ ?

இயற்கையானால் பாலுக்கு வெளுப்பும் கரிக்குக் கறுப்பும் ஒருகாலத்திலும் நீங்காததுபோல், ஆன்மாவிற்கு ஆணவமலமும் ஒருகாலத்திலும் நீங்காது. ஆனதினால் இயற்கையும் அன்று.

செயற்கையானால் வெள்ளைப்புடைவைக்கு அழுக்கேறுதல்போல் மோட்சத்திலும் ஆணவமலம் வந்து பொருந்தும். ஆனதினால் செயற்கையும் அன்று.

இனித் திருஷ்டாந்தம் எப்படி எனின், நெல்லிற்கு உமியும் செம்பிற்குக் களிம்பும்போல் அநாதி செயற்கை அநாதி சையோகம் என்றலும் ஆம். (தொடரும்)

அம்மையார் மாட்சி

திரு. கீ. இராமலிங்கம் M. A. அவர்கள்
ஆட்சிமொழித்துறைத் தனி அலுவலர், சென்னை.

(மலர் 19, இதழ் 6, பக்கம் 340 இன் தொடர்ச்சி)

கணவன் வினவிய வினாவிற்கு ஆண்டவன் அருளாதலின் வெளிப்படையாக விடை கூற முடியாது. பொய்ம்மை கூறின் கற்புக்கு வழுவாம்; ஆதலின் மெய்ம்மை கூறவேண்டும். ஆண்டவன் எல்லாவற்றையும் பொறுக்கும் தண்ணளி உடையவன். ஆதலான் உள்ளபடி சொல்வதே கடன் என்று சீலத்தால் 'ஆண்டவன் அருளியது' என்றார்.

கணவன் அதனை முழுவதும் நம்பாது ஆண்டவன் அருளால் இன்னும் வேண்டி வருக என வேண்டினன். அம்மையாரும் ஆண்டவனிடத்து மீண்டும் ஒரு பழம் பெற்றுக் கணவன் கையில் கொடுத்தார். அப்பழத்தில் அவனுக்குத் தெளிவு பிறக்குமாறு, அவன் கையிலிருந்த அப்பழம் அவன் கண்காண மறைந்தது; இது கொடுத்துவைத்ததுதான் கிடைக்கும் என்னும் உண்மைக்கு எடுத்துக்காட்டாகும். அவன் கொடுப்பித்த இரண்டு பழங்களுள் ஒன்றுதான் அடியார்க்கு ஊட்டப்பட்டது. அதனால் அதன் பயனாக அவன் ஒன்று மட்டும் உண்ணுவதற்கு உரியதாயிற்று. அப்பழம் மிக்க சுவையாய் இருந்ததற்குக் காரணம் அடியார்க்குச் செய்வனவற்றை ஆண்டவனே ஏற்று, செய்தார்க்குப் பயன் அருளுவதனால் என்க. மற்றொரு பழம் இவனால் கொடுக்கப்படாமல் இருந்தும், அம்மையாரது அடிமைத்திறம் புலப்பட ஆண்டவனால் அருளப்பட்டது. அம்மையாரைப்பெறும் பேறுபெற்ற தவத்தால் அம்மையார் கைப்புகுந்து, அம்மையாரால் காணப்பட்டமைபோல் இவன் கையிற் புகுந்து இவனாலும் காண நேர்ந்தது.

இதைக் கண்ட பரமதத்தன் அம்மையாரை மெய்ம்மைத் தெய்வமெனவே ஐயுறவின்றி தெளிந்தனன். அவரைத் தீண்டுதல் தகாதென உறுதிகொண்டனன். அதன் காரணமாக அயல் நாடு சென்று பொருள் தேடப் போவதாகத் தலைக்கீடு செய்து

கப்பல் அமைத்து வெளிநாடு சென்றுன். பெரும் பொருளோடு பாண்டி நாட்டில் வந்து மறுமணமுடித்து, ஒரு பெண் மகவு ஈன்று வாழ்ந்து வந்தனன். அப்பெண்மகவுக்குத் தான் தெய்வமெனக் கருதிய அம்மையார் பிள்ளைத் திருப்பெயராகிய புனிதவதியார் என்னும் பெயரைச் சூட்டி வழங்கி வந்தனன்.

இதனை யறிந்த அம்மையாரின் உறவினர் அம்மையாரை முடுபல்லக்கில் ஏற்றி பரமதத்தன் வாழும் ஊருக்கண்மையில் கொண்டுபோய்ச் சேர்த்தனர். அங்கிருந்து பரமதத்தனுக்குச் சொல்லிவிட்டனர். பரமதத்தனும் தான் பின் மணந்த மனைவியோடும் பெற்றெடுத்த மகளோடும் பலபொருள் காணிக்கையோடும் எதிர்வந்து அம்மையார் அடியில் வீழ்ந்து வணங்கினன். தன்னுடைய உண்மை நிலையை எல்லாரும் அறிய மொழிந்தனன்.

அஞ்சிய சுற்றத்தார்க்குத் தான் தெய்வமாதல் தெளிந்து வணங்கியது போல ஏனையாரும் அம்மையாரை வணங்குதல் வேண்டுமென்று கூறினன். இதனைக் கண்ட அம்மையார் அவன் கொள்கை உணர்ந்து அவன் பொருட்டுத் தாங்கிய வனப்பு மிக்க தம் தசைப் பொதி முற்றும், ஒழிந்துவிட வேண்டுமென்று ஆண்டவன்பால் இரந்து வேண்டினர் மேலும் அத்தசைப் பொதி நீங்கி ஆண்டவன் திருவடியைத் தொழும் பேய்வடிவமே தனக்கு அமையவேண்டுமென்றும் வேண்டிக் கொண்டார். வேண்டுவார் வேண்டுவதே ஈயும் விழுமியான் சிவனுதலின் அவ்வாறே அருளினன்.

அம்மையார் அத்திருவுடம்புடன் நின்று அப்பொழுதே 'ஆண்டவன் தாள்கள் போற்றும் நற்கணத்தில் ஒன்ருனேன நான்' என அற்புதத் திருவந்தாதி பாடினுர். அத்திருவந்தாதி நூற்றொன்று (101) திருப்பாட்டுக்களைக் கொண்டது. 'பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம்' என்று தொடங்குவது அவற்றுள் இரண்டாது திருப்பாட்டு "இடர்களையாரேனும்" என்னும் முதன் நினைப்பினை உடையது. அதனுல் நாம் அறியக் கிடப்பது ஆண்டவனை வேண்டித் தொழுவது நிலையாக உலகுடற்பொருள்களுக்காக அன்று; நிலைத்த திருவடிப் பேற்றிற்கே என்னும் மெய்ம்மையாம் அவ்வழிபாட்டினை அன்பு வழி பாடேன்போம் ஆண்டவனது பேரின்பத்தினைத் தருவதற்கு அவ்வன்பு நீராக நின்று பத்திப் பயிரை விளைவிக்கும்.

இருபதாவது பாட்டு ''அறிவானும் தானே'' என்னும் முதன் நினைப்பினை உடையது. இத்திருப்பாட்டு செம்பொருட்டு ணிவாம் சித்தாந்தத்தின் முடிந்த முடிபொருளை அங்கை நெல்லியென இங்கு யாவர்க்கும் எடுத்துக் காட்டுவது. ஆண்டவன் ஆருயிருடன் முத்திறப் புணர்ப்பாய் எத்திறத் தானும் நீங்காது நின்று அருளுகின்றான். முத்திறமாவன ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்பது, அவன்கலப்பால் ஒன்றாயும், பொருட்டன்மையால் வேறாயும், உயிர்க்குயிராய் நின்று உதவும் தன்மையால் உடனாயும் நிற்கின்றனன். இம்முத்திறப் புணர்ப்பே, பொய்கண்டார் காணாப் புனித மென்னும் அத்துவித மெய்யாகும்.

இதுபோன்று உலகுடன் உலகேயாய் அவ்வுலகின் வேறு மாய், அவ்வுலகினை இயக்கும் இயவுளுமாய் இருக்கின்றனன். முன் கூறிய உயிரோடு நிற்கும் முத்திறப் புணர்ப்புநிலை முறையே அறிவான். அறிவிப்பான் அறிகின்றான் என்பதனால் பெறப்படும். உலகோடு நிற்கும் நிலை ''விரிசுடர்பால் ஆகாசம் அப்பொருளும் தானே'' என்பதனால் பெறப்படும். ஆருயிரால் நிலைத்து அறியப்படவேண்டிய மெய்ப்பொருளும் அவனே ஆவான். இத்திருப்பாட்டின் சிறப்பெல்லாம் உணர்ந்த சிவ ஞான முனிவரரர் சிவஞானபோதப் பேருரைக்கண் இதனை எடுத்து ஆண்டுள்ளார். இதுபோல் அம்மையார் திருவிரட்டை மணி மாலையும் பாடியருளினார்.

திருக்கயிலைக்குச் செல்லவேண்டும் என்னும் திருவுள்ளம் அருளால் அம்மையார்க்குத் தோன்றிற்று. அம்மையார் கொண்ட அவ்வெண்ணம் தலையன்பால் விளைந்ததாதலின் தலையினாலேயே திருக் கயிலைக்கு நடந்து சென்றனர். முதற்கண் திருவருள் நோக்கம் பதியவேண்டுவது சிவதீக்கை முறை. ஆதலால் அப்பனோடிருந்த அம்பிகையின் திருநோக்கம் அம்மையார் மேல் பட்டு, எற்புடம்போடு வரும் இவ்வுயிரின் அன்பு என்னே! என்று ஆண்டவனை வினவினார். அதற்கு ஆண்டவன் 'வருமிவள் நம்மைப்பேணும் அம்மை; இத்தகைய பெருமை வடிவு நம்மை வேண்டிப் பெற்றனள்' என்று கூறினன். அவர்க்கு உலகெல்லாம் உய்ய 'அம்மை' என்னும் திருப் பெயர் சூட்டி அருளினன். ஆண்டவன் திருவாணைப்படி அம்மையும் இறவாத இன்பத்திற்கு ஏதுவாகிய பேரன்பை வேண்டினர். பிறந்தால் என்றும் மறவாமையை வேண்டினர்.

'மகிழ்ந்துபாடி நீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க வேண்டும்' என்றும் வேண்டினர். ஆண்டவன் திருவருளால் இவ்வவகை வேண்டுதலும் கைவரப் பெற்ருர்.

ஆண்டவன் திருவாணைப்படி திருவாலங்காட்டிற்கு வந்தார். அங்கு ஆண்டவன் மேல் நோக்கி ஆடும் திருக்கூத்தினைக் கண்டு மகிழ்ந்துபாடி அவன் அடியின் கீழ் என்றும் இன்புற்று இருப்பாராயினுர். திருக்கயிலையினின்றும் திருவாலங்காட்டிற்கு வரும்போது தலையினுலேயே நடந்து வந்தார்.

திருவாலங்காட்டில் மூத்தத் திருப்பதிகங்கள் பாடியருளினுர். அவை பண் முறையினுல் இரண்டு திருப்பதிகங்களாகக் காணப் படுகின்றன. இரண்டிற்கும் இருபத்திரண்டு திருப்பாடல்கள் இருக்கின்றன. அம்மையாரால் பாடப்பெற்ற மோத்தத் திருப் பாட்டுக்கள் நூற்றுநாற்பத்துமூன்ருகும்.

அம்மையார் மூவர்க்கும் முற்பட்டவராவார். அம்மையார் தலையால் நடந்த திருவாலங்காட்டைத் தாம் காலால் மிதித் தல் தகாதென்று திருஞானசம்பந்தப் பெருமான் ஊருக்கு வெளியே நின்று அப்பனைப் பாடியருளினுர். அதுபோலவே எல்லா நாயன்மாரும் அம்மையாரிடத்துப் பெரு மதிப்புக் கோண்டுள்ளனர். அம்மையார் திருப்பாடல்கள் பதினோராவது திருமுறைக்கண் இரண்டாவதாகத் தோகுக்கப்பட்டுள்ளன. அதில் முதலாவதாகத் தோகுக்கப்பட்டுள்ளது சிவபெருமான் பாடிய திருமுறைப் பாசுரமாகும். எனவே, முதற்கண் அப்பனும் இரண்டாவது அம்மையும் வைப்பு முறையில் காணப்படு கின்றனர் ஏனைய அத்தோகுப்பிலுள்ள பதின்மரும் இவ்விரு வரையும் போற்றும் இயல்பினுர் போலப் பின் வரிசையாகத் தோகுக்கப்பேற்றனர்.

இத்துணைச் சிறந்த அம்மையார் திருவரலாற்றினையும், திருப்பாட்டுக்களையும் நாம் எல்லோரும் நாள்தோறும் ஓத வேண்டும் சிறப்பாகப் பேண்பாலார் ஏனையாரையும் உடன் சேர்த்துக் கிழமைக்கு ஒரு முறையேனும் தம் மனையகத்து நினைவுநாள் கோண்டாடி வருதல் எல்லாவகை வாழ்வுக்கும் பெருந்துணையாம் எனக் கருதுதல்வேண்டும். அம்மையார் திருப்பாடல்களை அரும்பெரும் மந்திரமாக ஓதி அவரையும் வழிபட்டு நலம் பெறுவோமாக.

இரண்டாம் இராசாதிராசனது : : : : திருவொற்றியூர்க் கல்லெழுத்து

சிவநெறிச்செல்வர்,
வித்துவான், திரு. கே. எம். வேங்கடராமையா M. A., B. O. L.,
பிரின்ஸிபால், சேந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

(மலர் 19 இதழ் 5 பக்கம் 343 இன் தொடர்ச்சி)

இவ்வாகீசுவர பண்டிதர் திருவொற்றியூரில் தனியாக ஒரு மடத்தை நிறுவி அங்கிருந்து சிவத்தொண்டு புரிந்தார் என்று தோன்றுகிறது. சகம் 1260-61ல் (கி. பி. 1339-40ல்) அரசனுன சகலலோக சக்கரவர்த்தி ராஜநாராயணச் சம்புவராயருடைய 5ம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்து [1] கீழை மடத்து முதலியார் என்று ஒருவரைக் குறிக்கிறது ; இவனது 12 வது ஆண்டுக் கல்வெட்டுக் கீழை மடத்து முதலியார் வாகீசுவர தேவர் [2] என்று பெயர் கூறுகிறது. இது சோமசித்தாந்தம் வக்கரணிக்கும் வாகீசுவர பண்டிதர் குறிக்கப்பெற்ற கல்லெழுத்துக்கு $1\frac{1}{2}$ நூற்றுண்டுக்குப் பிற்பட்டது எனினும், வாகீசுவர பண்டிதர் தங்கியிருந்து தொண்டுசெய்த மடம் "கீழைமடம்" என்றுபெயர் பெற்றதாயிருக்கும் என்று நினைக்க இடம் தருகிறது. அன்றியும் கீழை மடத்து முதலியார் வாகீசுர தேவர் இறந்து பட்டகாலத்தில் தனக்குப் பிறகு அம்மடத்துத் தலைமை பூண்பவர் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் என்றும் கூறப்பெற்றுள்ளது. எனவே திருவொற்றியூரில் ஒரு மடத்தில் (அதாவது கீழை மடத்தில்) தங்கிச் சிவத்தொண்டு புரிந்தவர் வாகீச பண்டிதர் என்னலாம் ; அவர் சிவாகமக் கருத்துக்களைத் தமிழில் யாவருக்கும் விளங்கும் வண்ணம் ஞானமிர்தம் [3] என்ற

---

[1] 212 of 1912 ; S. I. T. I 525

[2] 207 of 1912 ; S. I. T. I. 508

[3] இது செம்மையான 75 அகவற்பாக்களையுடையது ; சங்கத் தமிழ் நடையில் எழுதப்பெற்றது ; சிவஞானசுவாமிகளால் சிவஞானபோத உரையிலும், சிவஞானசித்தியார் உரைகளிலும், சிவப்பிரகாச உரையிலும் எடுத்தாளப்பெற்றது ; பதி பசு பாச வியல்புகளைத் தெளிவுற இயம்புவது ; ஞான முதலிய நான்கு பாதங்களையும்

பெயரால் ஒரு சாத்திர நூலை எழுதினர். இந்நூலை எழுதியமையால் இவர் ஞானமிருதாசாரியர் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பெற்றார்.

இனி இவர் திருநெல்வேலி மாவட்டத்துக்குச் சென்று திருவாலீச்சரம் என்ற ஊரில் இருந்த கோளகி மடத்துத் தலைவராய் இருந்தார் என்றும், இவருக்குப்பின் திருவாலீச்சர மடத்தினர் தம்மை ஞானமிருதாசாரியர் சந்தானம் என்று கூறிக்கொண்டனர் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்[4], திருஞானம்[5] விண்ணப்பிப்பதற்குச் சிவப்பிராமணர் எண்மர் கோளகி மடத்து ஞானமிர்தாசாரிய சந்தானத்தைச் சார்ந்த புகலிப்பெருமாள் என்பாருடன் உடன்படிக்கை செய்துகொண்டனர் என்று ஜடாவர்மன் திருபுவனச் சக்கரவர்த்தி வீரபாண்டிய தேவனது 3ம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்திலும்[6], கோளகி மடத்து ஞானமிர்தாசாரிய சந்தானத்தவரான அகோர தேவர்' என்று இன்னொரு கல்லெழுத்திலும்[7] ஞானமிர்தாசாரிய சந்தானம் என்று ஒரு வழிமுறை நுவலப்பெறுகின்றது. இவற்றால் ஞானமிர்தம் என்ற நூலை அருளிச் செய்தவரைத் தலைவராகக்கொண்ட சைவாசாரிய பரம்பரையொன்று நிலவியது என்றும் அறியக் கிடக்கின்றது.

இக் கல்லெழுத்தில் குறிக்கப்பெற்ற வாகீசுவர பண்டிதர் சோமசித்தாந்தத்தைப் பிறர்க்கும் எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றவர் என்று அறியப்பெறுகின்றது. கோளகி மடத்தைச்

தெரிவிப்பது ; இந்நூற்கு அரியதோருரையுண்டு. இந்நூலைத் திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்களைக்கொண்டு பரிசோதித்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் அவர்கள் நிறுவிய ஸ்ரீ ராஜராஜ அபய குலசேகர சோழ மகாராஜா நினைவுத் தேவாரத் திருமுறைப் பரிசு தமிழ் நூல் வெளியீடு என்னும் அறக்கட்டளையின் கீழ் வெளியிடப்பெற்றுள்ளது.

[4] மு. ரா. சாஸனத்தமிழ்க்கவி சரிதம் பக்கம் 79 ; ஞானமிர்தம் முன்னுரை பக்கம் XXV.

[5] திருஞானம் - தேவாரம்.

[6] 359 of 1916

[7] 361 of 1916.

சேர்ந்த சோமசம்பு சிவாசாரியார் என்பார் சோமசம்புபத்ததி[8] என்ற நூலை எழுதியவர். இச் சோமசம்புபத்ததி முதலான நூல்களில் கூறப்பெற்ற செம்பொருள்களை விரித்துரைத்தலில் வல்லுநராயிருந்தமைபற்றி இவர் " சோமசித்தாந்தம் வக்காணிக்கும் வாகீசுவர பண்டிதர் " எனப் பெற்றூர்.

இவ்வாகீச பண்டிதரே ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணத்தை விரிவுரை செய்தார் என்று கருதுபவருமுண்டு[9]; அது பொருந்தாது. இவரும் பிறருடனிருந்து ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணத்தைக்கேட்டார் என்று கல்வெட்டுத் தெளிவாகக் கூறுகின்றது.

ஆளுடைய நம்பி ஸ்ரீபுராணம்

ஆளுடைய நம்பி[10] என்பது சுந்தரரைக்குறிக்கும். சுந்தரர் வரலாற்றைக் கூறும் புராணம் ஆளுடைய நம்பி ஸ்ரீபுராணம் எனப்பெற்றதுபோலும். சேக்கிழார் பெரிய புராணத்தில் தடுத்தாட்கொண்ட புராணம், கழறிற் றறிவார் புராணம்[11], ஏயர்கோன்கலிக்காமர் புராணம், வெள்ளானைச் சருக்கம் என்ற

---

[8] சிவாகமங்களிலுள்ள கிரியாகாண்டப் பொருள்களைத் திரட்டி முறையாக வரிசைப்படுத்திப் பத்ததி என்னும் பெயருடன் 18 பத்ததிகள் 18 சிவாசாரியர்களால் செய்யப்பெற்றுள்ளன. அவர்களுள் ஒருவர் சோமசம்பு சிவாசாரியர். பத்ததி என்ருல் வழி என்று பொருள். எனவே சோமசம்பு பத்ததி என்ருல் சோமசம்பு சிவாசாரியார் கண்டவழி என்பது பொருள். இந்நூலுக்குக் கிரியா காண்டக்ரமாவளி என்றும் பெயருண்டு. இந்நூல் அசிந்திய விசுவ சாதாக்கியம் என்னும் ஆகமத்தை ஆதாரமாகக்கொண்டது, இதன் முடிவில் 4 சுலோகங்கள் உள்ளன. முதல் சுலோகத்தில் ஆசிரியருடைய குருபரம்பரை விளக்கப்பெற்றது; அடுத்ததில் இவர் கோளகி மடாதிபதி என்றுள்ளது; நான்காவதில் ஸ்ரீ விக்ரமன் என்ற அரசன் காலமாகிய சகாப்தம் 811ல் 2000 சுலோகங்கள் கொண்ட இந்நூல் செய்யப்பட்டது என்று கூறப்பெற்றது. இந்நூலில் கூறப்படுவன நித்தியம், நைமித்தியம், காமியம் என்பனவற்றின் விதிகளாம்,

[9] ஞானமிர்தம், முகவுரை பக்கம் XXVIII.

[10] S. I. I. Vol IV 397 ; 73 of 1890 இரண்டாம் குலோத்துங்கனுடைய திருவாரூர்க் கல்லெழுத்தும் சுந்தரரை ஆளுடைய நம்பி என்று கூறுகிறது.

[11] கழறிற்றறிவார் - சேரமான் பெருமாள் நாயனர்.

நான்கு பகுதிகளில் சுந்தரர் வரலாற்றை மிக விரிவாகப் பாடி யுள்ளார். ஆகவே பெரிய புராணத்தில் கண்ட இப்பகுதிகளையே ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணம் என்றனர்போலும். இதனைக் குறித்துப் பெரியபுராண ஆராய்ச்சி [12] என்ற நூலுள் கூறியது பின் வருமாறு :-

'' மக்கள் கேட்கத் தக்க நிலையிலும் கோயிலில் விளக்க மாக வாசிக்கத்தக்க முறையிலும் சுந்தரர் வரலாற்றைக் கூறு வது பெரியபுராணம் ஒன்றேயாகும்; மேலும் சுந்தரர் வரலாறு கூறும் வடமொழி நூலோ, வேறு தமிழ் நூலோ, சேக்கிழார்க்கு முன் இருந்தது என்று கூறச் சான்றில்லை ; ஆதலின் திருவொற் றியூர்க் கோயிலில் படிக்கப்பட்டது சேக்கிழார் செய்த பெரிய புராணத்துள் அடங்கிய சுந்தரர் புராணமாகவே யிருத்தல் வேண்டும் ''.

மகிழடி சேவை

சுந்தரர் புவியுட் சிவலோகம் போலத் திகழும் திருவொற்றி யூரை அடைந்தார். திருக்கயிலையினின்று அநிந்திதையார் ஞாயிறு என்ற ஊரில் ஞாயிறுகிழாரின் திருமகளாக அவதரித்து இருந்தார். சங்கிலியார் என்று திருநாமம் பெற்றார் ; சங்கிலியா ருக்குத் திருமணப் பருவம் வந்தது ; யாரையும் மணக்க விரும் பாமல் திருவொற்றியூரில் கன்னிமாடம் அமைப்பித்து அங்கே தங்கித் திருவொற்றியூர்ப் பெருமாற்குத் திருத்தொண்டுகள் புரிந் திருந்தார். திருவொற்றியூரை அடைந்த சுந்தரர் பூமண்டபத்தி னுள்ளே சங்கிலியாரைக் கண்டு அவரைக் குறித்து வினவினார் ; செய்தி அறிந்து சங்கிலியாரைத் தந்தருளுமாறு இறைவனை வேண்டினார். இறைவனும் ' சங்கிலியை உனக்குக் கொடுக் கின்றோம் ; கவலை ஒழி என்றருளினார். பின்னர்ச் சிவபெருமான் சங்கிலியார் கனவில் தோன்றி, ' நம்பியாரூரன் உன்னை மணஞ் செய்ய விரும்பி என்னை வேண்டினான் ' என்று அருளி, ' உன்னைப் பிரியாதவாறு சபதம் செய்து கொடுப்பான் ' என்றும் கூறினார் ; பின்னர்ச் சுந்தரரிடம் எழுந்தருளி, ' சங்கிலியிடம் உன்னைப் பிரியேன் ' என்று சபதம் செய்து கொடுத்தல் வேண்டும் என்றார். சுந்தரர் பெருமானை நோக்கி, இறைவனே ! சபதம் செய்து கொடுக்கச் சந்நிதிக்கு "வரும்போழுது தாங்கள் திருமகி ழின்கீழ் எழுந்தருளல் வேண்டும் ' என்று வேண்டினார். சிவ பெருமான் இசைந்தருளினார் ; சங்கிலியாரிடம் சென்றார் ;

சங்கிலியே ! நம்பியாரூரர் சபதம் செய்து கொடுக்கச் சந்நிதிக்கு வரும்போழுது மகிழின்கீழ் சபதம் செய்து கொடுத்தால் போதுமானது ; சன்னிதியில் வேண்டாம் என்று கூறுவாயாக ' என்று கூறி மறைந்தருளினர். மறுநாள் சுந்தரர் சபதம் செய்து கொடுக்கச் சன்னிதிக்கு வந்தார் ; சங்கிலியார், இறைவன் திருமுன் சபதம் செய்து கொடுத்தல் தகாது ; மகிழின்கீழ்ச் சபதம் செய்தால் போதும்' என்றார். நம்பியாரூரர் திகைத்தார் ; அங்ஙனமே திருமகிழின் கீழ்ச்சபதம் செய்து கொடுத்தார். மறுநாள் திருவொற்றியூர்த் திருத்தொண்டர்கள் நம்பியாரூரருக்கும் சங்கிலியாருக்கும் திருமணம் செய்வித்தார்கள்.

இச்சுந்தரர் வரலாற்றை நினைவு கூர்ந்து, திருவொற்றியூர்ப் பெருமானைத் திருமகிழின்கீழ் எழுந்தருள்வித்து விழாக் கொண்டாடுவது '' மகிழடி சேவை '' எனப்பெறும். மகிழடி சேவை பிற கோயில்களில் நடத்தப்பெறுவதில்லை ; இது திருவொற்றியூர்க்கே யுரியது.

(தொடரும்,)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil

I had the fortune of worshipping Lord Vaideesswara this morning. The temple is very neatly kept and a religious atmosphere prevails in the entire temple. The present position of the temple is not a little due to the interest evinced by His Holiness the Head of the Mutt.

(Sd.) R. SUBRAMANIAM.
Asst. Director of Survey & L. R. Madurai.
21—8—59.

பழந்தமிழ் நூல்களில் உயிர் வகைகள்

வித்துவான், திரு. செ. வேங்கடராமச் செட்டியார் அவர்கள்
ஆராய்ச்சி விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணுமலைநகர்.

(மலர் 19, இதழ் 6, பக்கம் 321 இன் தொடர்ச்சி)

" கைவல் கம்மியன் கவின்பெறப் புணைந்த
சேங்கேழ் வட்டம் சுருக்கிக் கோடுந்தறிச்
சிலம்பி வானூல் வலந்தன தூங்க " (நெடுநல்வா 57-59)

என்பது காண்க. இதனுல் சிலம்பியின் வாயில் நூல் தோன்றும் என்பதும் அந்நுண்ணிய நூலால் மக்கள் கைபடாத இடங்களில் கூடு கட்டும் என்பதும் அறியலாம். திருவானைக்காவில் ஒரு சிலந்தி இறைவனுக்கு வாய் நூலால் பந்தர் செய்த புண்ணியத்தால் கோச்செங்கட் சோழனுகப் பிறந்தான் எனத் திருநாவுக்கரசர் (4-49-4) கூறியுள்ளதும் இங்கு நினைக்கத்தகும்.

12. எறும்பு

எறும்பில் பலவகை யுண்டு. இது தரையில் சிறு சிறு துளை செய்துகொண்டு அதில் வாழும் இயல்பினது. இது தோட்ட துணரும் ஊற்றுணர்ச்சியும் நாவுணர்ச்சியும் மூக்குணர்ச்சியும் ஆகிய மூன்றறிவினை யுடையது. இதனைத் தோல்காப்பியரே,

" சிதலும் எறும்பும் மூவறிவினவே " (மரபியல். 30)

என்று கூறியுள்ளமை காண்க. எனவே இவ் எறும்புக்குக் கண்ணும் காதும் இல்லை என்பது தெளியலாம். ஒன்றன்பின் ஒன்ருய் இவ்வெறும்புகள் சென்று உணவைத்தேடிக்கோணர்ந்து துளையில் சேர்ப்பதேல்லாம் மூக்குணர்ச்சியால்தான் என்பதறியலாம். ஒரு பாறையில் உள்ள சிறு சிறு சுனைகளுக்கு இந்த எறும்பின் துளைகளை உவமையாக உரைக்கின்ருர் ஓரம்போகியார்.

" எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
உலைக்க லன்ன பாறை " (குறுந். 12)

என்பது காண்க. மழையின் வரவை மக்கள் உணர்தற்கு முன் இவ்வெறும்பு அறிந்துகோண்டு வன்னிலத்தை அடைந்து

தற்காப்புச் செய்துகொள்ளும் திறமை மிக்கது. சிறுகுடி கிழான் பண்ணனைச் சிறப்பித்துப் பாடிய சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் இச் சிற்றெறும்பின் செயலையும் ஊன்றி நோக்கி நமக்கு எடுத்துரைக்கிறான். வறுமை மிக்க காலத்தில் பண்ணன் மக்களுக்கு வேண்டிய சோறு கொடுக்கின்றான். சிறுவர்கள் பண்ணன் கொடுக்கும் சோற்றுண்டைகளைக் கையில் தாங்கிக்கொண்டு வரிசை வரிசையாக மகிழ்ச்சியுடன் செல்லுகின்றார்கள். அவர்கள் செல்லும் காட்சி அக் கிள்ளிவளவன் உள்ளத்தில் ஒரு நல்ல உவமையைத் தோற்றுவித்தது. பொய்யாமல் பெய்யும் மேகம் பெய்யும் பருவத்தை முன்னரே நுண்ணிதின் உணர்ந்து தம் முட்டைகளைக் கொண்டு திட்டையேறுகின்ற சிறிய நுண்ணெறும்பின் ஒழுங்குதான அச் சிறுவரின் செல்கைக்கு ஏற்ற உவமம் என்று அவன் உள்ளத்தில் பட்டது கூறுகின்றான்.

> "பொய்யா எழிலி பெய்விட நோக்கி
> முட்டை கொண்டு வற்புலஞ் சேரும்
> சிறு நுண் ணெறும்பின் சில்லொழுக் கேய்ப்பச்
> சோறுடைக் கையர் வீறு வீறியங்கும்
> இருங்கிளைச் சிறாஅர்" (புறநா. 173)

என்பது காண்க. (எழிலி—மேகம். வற்புலம்—வன்னிலம்.) இதனால் ஆறறிவுடைய மக்கள் உணராத முன்னமே மழையின் வருகையை யுணர்ந்து மென்னிலம் விடுத்து வன்னிலம் சேரும் அவ்வெறும்பின் நுண்ணறிவையும் வருமுன் காக்கும் திறனையும் கண்ணிலதாயினும் ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாகச் செல்லும் அவற்றின் கட்டுப்பாட்டினையும் நோக்கின் நம்மனோர்க்கு வியப்பையும் நயப்பையும் நல்குவதாகும்.

இவ்வெறும்புகள் முட்டைகளைக் கொண்டு வரிசையுறச் செல்வதுபோலவே உணவுப் பொருள்களையும் கொண்டு செல்வதுண்டு. கோடை வெப்பம் நீடிக்கின்றது. விளைபுலங்கள் வாடுகின்றன; வாடிய நிலத்தில் சிந்துகின்றன சிறிய தானியங்கள். அச் சிறிய புல் உணவைத்தேடி இவ்வெறும்புகள், வழி தோன்றுமாறு வரிசையாக அலைந்து திரிகின்றன; கம்பு, தினை முதலிய புல் உணவைப் பெறுகின்றன. பெற்ற அவ் வுணவை வாயில் கவ்விக்கொண்டு தம் துளையில் சேர்த்து வைக்கின்றன.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்தமான
சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில்



திருமுலைப்பால் திருவிழாவில் அன்பர்களுக்குத்
திருமுலைப்பால் வழங்குதல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சோந்தமான
சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில்

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளை
25ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
வழிபடுதல்

அவ்வாறு அவ்வெறும்புகள் சேர்த்துவைத்த அத் தானியங்களை அப் பாலைவனத்திலுள்ள பெரிய வில்லையுடைய மறவர்கள் வித்தி விளைக்காமலே உணவாகப் பெறுகின்றார்கள். இந் நிகழ்ச்சியை மாறோக்கத்துக் காமக்கண்ணி நப்பாலத்தனார் என்னும் புலவர் சுவையுறக் கூறுகின்றார்.

"கோடை நீடலின் வாடுபுலத் துக்க
சிறுபுல் லுணவு நெறியட மறுகி
நுண்பல் எறும்பி கொண்டளைச் செறித்த
வித்தா வல்சி வீங்குசிலை மறவர்" (அகநா. 377)

என்பது காண்க. இதனால் எறும்பு ஊர்ந்து சென்ற இடம் நெறியாகக் காணப்படும் என்பதும் உணவுப் பொருள் உள்ள இடத்தை மூக்குணர்வால் அறிந்து சென்று கூட்டுறவு உணர்ச்சியுடன் எல்லா எறும்புகளும் வாயில் கவ்விக்கொண்டு வரிசையாகக் கொடுவந்து தம் அளையில் சேர்க்கும் முயற்சியும் ஒற்றுமையுணர்ச்சியும் உடையன என்பதும் உணரலாம், எறும்பின் இப்பண்புகள் மக்கள் எல்லாம் பின்பற்றத்தக்க உயர்வுடையனவாதல் காண்க.

13. முயிறு

இது செந்நிறமுடையதாய் வடிவத்தால் எறும்பினை ஒத்ததாய் இருக்கும். இது மருத நிலத்தில் படரும் பாகற் கொடியில் கூடு கட்டி மொய்க்கும் இயல்பினது. இதன் இயல்புணர்ந்த ஓரம்போகியார்,

"பழனப் பாகல் முயிறு மூசு குடம்பை
கழனி எருமை கதிரோடு மயக்கும்...ஊர்" (ஐங். 99)

என்று கூறியுள்ளார். "மருத நிலத்துள்ள பாகற்கொடியில் முயிறுகள் மொய்த்துள்ள கூட்டினையும் கழனியிலுள்ள நெற் கதிர்களையும் சேர்த்து எருமை கலக்குகின்ற ஊரையுடையான்" என்பது பொருள். இதனால் நெற்கதிரின் தோற்றமும் பாகற் கொடியில் முயிறு மொய்க்கும் கூட்டின் தோற்றமும் ஒப்புமை யுடையன என்பதும் முயிறு தங்கும் இடமும் அதன் இயல்பும் உணரலாம். எறும்பு போலவே இம்முயிறும் சேர்ந்து வாழும் ஒற்றுமை யுணர்ச்சியுடையதேயாகும்.

14. சிதல்

இது சிதலை எனவும் வழங்கப்படுகின்றது வடிவமைப்பில் எறும்பையொத்து வெண்மை நிறமுடையதாயிருக்கும். இதுவும் எறும்புபோல் கண்ணறிவும் காதறிவுமின்றி மூக்கறிவோடு மூவறிவையுடையதாதலைத் தொல்காப்பியர் (மரபியல் - 30) நூற்பாவால் முன்னரே யுணர்ந்தோம். இதன் முயற்சியும் திறனும் வியக்கத்தக்கதாகும். வடிவத்தால் மிகச்சிறியதாய் உள்ள இச்சிதலை முயற்சியாலும் கூட்டுறவுணர்ச்சியாலும் சிறுதுகள் கொண்டு பெரும்புற்று அமைக்கும்பேற்றி வாய்ந்தது. இப்பெரிய புற்றில் சிதலைகள் சேர்த்துவைக்கும் உணவின் திரட்சியே புற்றுஞ்சோறு எனப்படும். கரடி இப்புற்றுஞ் சோற்றினை யுண்பதில் மிக விருப்புடையது. பெரிய கரடி கூட்டங்கள் இரைதேட எழுந்து முதலில் இச்சிதலை நெடு நாளாய் முயன்று எழுப்பிய உயர்ந்த புற்றில் மறைந்துள்ள புற்றுஞ் சோற்றைக்கிண்டித் தின்னுமாம்; அதில் வெறுப்புத் தோன்றினல் இருப்பை மரத்திலிருந்து உதிர்ந்துள்ள தூளை யுடைய பூக்களைக் கவர்ந்து உண்ணுமாம். இதனை,

> " சிறுபுன் சிதலை சேண்முயன் றெடுத்த
> நெடுஞ் செம் புற்றத் தொடுங்கிரை முனையின்
> புல்லரை இருப்பைத் தொள்ளை வான்பூத்
> தெருங்கை யெண்கின் இருங்கிளை கவரும்" (அநா-149)

என எருக்காட்டூர்த் தாயங்கண்ணனுர் கூறுவதால் உணரலாம். ஐயூர் முடவனுரும்

> " நுண்பல் சிதலை யரிது முயன்றெடுத்த
> செம்புற்று" (புறநா - 51)

எனக்கூறியுள்ளமை காண்க. இதனுல் இச்சிதலின் சிறுவடிவும் பெரும்புற்றமைக்கும் திறமும் உணவைச் சேர்த்துவைக்கும் இயல்பும் பலவாய்ச் சேர்ந்துவாழும் ஒற்றுமை யுணர்ச்சியும் உணரலாம். இதுகாறும் 14 ஊர்வனவாகிய உயிர்களைப்பற்றிப் பழந்தமிழ்ப் புலவர் கூறியுள்ளனவற்றைக் கண்டோம்.

முற்றும்.

திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

(மலர் 19 இதழ் 6 பக்கம் 358 இன் தொடர்ச்சி)

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர், வித்துவான், திரு. க. வெள்ளைவாரணம் அவர்கள் " திருக் குறுந்தொகை " என்ற தலைப்பில் ஆற்றிய விரிவுரையின் சுருக்கம் :-

குறுந்தொகை குறுகிய அடிகளை உடையது. எளிய சந்தம் பெற்ற கலிப்பா வகையைச் சார்ந்தது. ஒரு அடியில் பதினொரு-பன்னிரண்டு எழுத்துக்களை உடையது. நான்கு சொற்களுக்கு மூன்றுதளை. முதலில்- ஆசிரியத்தளை - பிறகு வெண்டளை. சிலம்பில் இளங்கோவடிகள் கொற்றவை வழிபாட்டைக் கூறும் போது,

" நாக நாறு நரந்தை நிரந்தன
ஆவும் ஆரமும் ஓங்கின எங்கணும்
சேவும் ஆவும் செறிந்தன கண்ணுதல்
பாகம் ஆளுடை யாள்பலி முன்றிலே "

என்று தொடங்கும் பாடலைக் குறுந்தொகையாகப் பாடுகிறார். அடிகளுக்கு வரையறை செய்யப்பட்ட எழுத்தெல்லையைத் தாண்டிப் பாடிய பாக்கள் தாண்டகம். " அல்லல் என்செயும் அருவினை என்செயும் " என்று கேட்கிறார். தில்லைக் கூத்தனிடம் எல்லையில்லதோர் அடிமை பூண்டேன் என்கின்றார். திருவாரூர் பதிகத்தில்,

" அம்மை யாரெனக்கென் றென்று அரற்றினேற்கு
அம்மை யாரைத்தந்தார் ஆரூர் ஐயனே "

என்று திலகவதியார் தன்பொருட்டு வாழ்ந்து தன்னை நன்னெறிப் படுத்தியதைக் கூறினார்.

" அண்டர் வாழ்வும் அமரர் இருக்கையும்
கண்டு வீற்றிருக்கும் கருத்து ஒன்றிலோம்
வண்டுசேர் மயிலாடு துறை யரன்
தொண்டர் பாதங்கள் தூவித் துதையிலே "

என்று குறுந்தொகைப் பாடலால் இவர் இறைவனிடத்தும் அவர் அடியவரிடத்தும் கொண்டுள்ள பற்றை நன்கு தெளியலாம்.

9—5—60 மூன்ருவது திருநாள்

தருமையாதீனப்புலவர், பண்டித, வித்துவான், திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் "திருக்கயிலாய ஞான உலா" என்ற தலைப்பில் பேசியதன் சுருக்கம் :-

கொடுங்கோளூரில் இருந்து அரசாண்டவர் சேரமான் பெருமாள் நாயனுர். யாவும் யாரும் கழறின அறியும் தன்மையை இறைவனிடம் வேண்டிப் பெற்றவர்; ஆதலால் 'கழறிற்றறிவார்' என்று கூறப்படுகிருர்.

சுந்தரரின் உயிர்த்தோழரான இவரால் செய்யப்பெற்றது 'திருக்கயிலாய ஞான உலா'; ஆதி உலா என்றும் கூறுவர். சேரமான்பெருமாள் நாயனுர் கயிலை செல்லும்போது பாடியது இது. பதினேன்ரும் திருமுறையில் வைக்கப்பெற்றுள்ளது. இவர் தான் பூசை செய்யும் காலத்தில் இறைவனின் சிலம்பொலி கேட்கும் பேறு படைத்தவர். 'முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்' என்றதுபோல, ஒருநாள் உவர்மண் சுமந்துவரும் வண்ணுனின் தோற்றம் சிவனடியார் வேடத்தை ஒத்திருக்க, சேரமான் யானையினின்றிழிந்து 'அடியேன் அடிச்சேரன்' என்று கூறி வணங்கினுர்.

'செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே' என்று கூறப்பெறும் செல்வம் இத்தகைய செல்வமே. இதுவே அருட் செல்வமாகும். உலாவில் ஆண்டவனே பாட்டுடைத் தலைவன். ஆன்மாக்களே மகளிர். இப்படி உயிர்கள் இறைவன்பால் அன்புகொண்டு அவனடியே சிந்திக்கின்றன. உலாவில் விளக்கப் பெறுகின்றன இவைபோன்ற சிறந்த கருத்துக்கள்.

வித்துவான், ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் "நான்மணி மாலையில் சுந்தரர்" என்ற தலைப்பில் பேசியதன் சுருக்கம் :-

நான்மணி மாலையின் ஆசிரியர் - கற்பனைக் களஞ்சியம் எனப்படும் சிவப்பிரகாச சுவாமிகள் ஆவார்கள். வெண்பா, அகவல், கலித்துறை, விருத்தம் என்ற நான்கு பாக்களால் நூலை ஆக்கியுள்ளார். இதனுலேயே இந்நூலுக்கு நான்மணி மாலை என்று பெயர்.

அப்பர் - கடலில் கல்லுடன் மிதந்தார். சம்பந்தர் மயிலாப்பூரில் எலும்பைப் பெண்ணாக்கினார். சுந்தரர் - முதலை உண்ட பாலனை அழைத்தார். இவற்றுள் எது சிறந்தது என்று வினவை எழுப்பிப் பின்னர், குளத்தில் நீரையும் பின்னர் முதலையையும் வரவழைத்து அதில் வளர்ந்த பாலனை கரைக்கண் முதலை தன் வாயிலிருந்து உமிழுமாறு செய்தார் - சுந்தரர். ஆதலால் முதலையுண்ட பாலனை அழைத்த சுந்தரர் செய்த அற்புதமே சிறந்தது என்கிறார். இக்கருத்தை

" போதமுண்ட பிள்ளை யென்பு போருகண்மாது செய்தோ
காதல் கொண்டு சொல்லின் மன்னர் கன்மிதப்ப வுய்த்ததோ
வாய்திறந்து முதலைகக்க மகனை நீயழைத்ததோ
யாதுநம்பி யரிது நன்றெனக்கியம்பவேண்டுமே "

என்ற பாடலால் விளக்கிக் கூறுகிறார்.

உடல் என்னும் குளத்திலிருந்து, உயிர் எனும் பிள்ளையை ஆணவ - மலம் என்னும் முதலையிடமிருந்து - நாதாந்தம் என்னும் கரையில் - சிவன் - என்ற தந்தையிடம் சேர்க்க வேண்டும், என்று ஒரு அழகிய உருவகத்துடன் சிறந்த கருத்தை விளக்குகிறார். மேலும் சங்கலியால் பிணைத்தும் பரவையுள் தள்ளினார் இறைவன். ஆயினும் இறைவனை மறவாமல் ஏத்துவதே தொழிலாகக்கொண்டு வாழ்ந்து கயிலை சென்று இறைவனிடம் கலந்தார் சுந்தரர் என்பனபோன்ற பல கருத்துக்கள் நிறைந்திருக்கின்றன.

திரு. கீ. இராமலிங்க முதலியார் M. A., அவர்கள் (ஆட்சி மொழித் தனி அலுவலர், சென்னை) " சுந்தரர் செந்தமிழ் " என்ற தலைப்பில் ஆற்றிய விரிவுரையின் சுருக்கம் :-

அப்பர், சம்பந்தர் ஆகிய இருவருக்கும் பிற்பட்டுச் சுமார் 200 வருடங்களுக்குப் பிறகு அவதரித்தார் சுந்தரர். சுந்தரருக்கு ஒருமணத்தைத் தடுத்த இறைவன் பின்னர் பரவை - சங்கிலி ஆகிய இருவரையும் கூட்டி வைத்தார். அப்பர்பெருமான் - துறவியாகவே வாழ்ந்தார். சம்பந்தர் மணந்தவுடன் முத்தி பெற்றார்.

பரவையாரைக்கண்ட சுந்தரர் ‘ கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் ’ என்ற பாடலில் ‘ அற்புதமோ, சிவனருளோ அறி யேன் ’ என்ருர். சிவனது அருளினுல்தான் சுந்தரர் சங்கிலி யாரையும் மணந்தார். கடல் நாகைக் காரோணம் மேவி இருக்கும் ஈசனிடம் - தோழமை பூண்ட சுந்தரர் முத்தராம், வயிரமணிக் கோவை, ஆடைகள் வேண்டும் ‘ கறிவிரவு நெய் சோறு முப்போதும் வேண்டும் ’ என்றெல்லாம் கேட்கிருர்.

தன்னேத் தடுத்தாண்ட இறைவனேப் பின் மறவாமல் செந் தமிழால் பாடி மகிழ்ந்தார். அவர் பாடல்களேச் சொல்லக் கேட்க வல்லவர்களின் வினேதீரும்.

செந்தமிழ்ச் செல்வர், வாகீச கலாநிதி, ‘ கலேமகள் ’ ஆசிரியர், வித்துவான், திரு. கி. வா. ஜகந்நான் M. A., அவர்கள் “ நாவலர் காவலர் ” என்ற தலேப்பில் பேசியதன் சுருக்கம் :-

‘ நாவலர் காவலர் நின்ருர் நடுநின்ருர் படைமதனுர் ’ என்று சேக்கிழார் ‘ நாவலர் காவலர் ’ என்ற பட்டத்தைச் சுந்தரருக்குச் சூட்டினுர். திருத்தோண்டத்தொகை விரித்த திருவாளனுன சுந்தரர், நாவல் என்னும் திருநாவலூரில் பிறந்தார். சடையனுர் இசைஞானியார் இருவருக்கும் மகனுய்ப் பிறந்து, நரசிங்கமுனே யரையர் என்ற நாடுவாழ் அரசரால் வளர்க்கப்பட்டார். சடங்கவி யின் மகளேத் திருமணம் செய்யும்போது ஆண்டவனுல் தடுத் தாளப்பட்டார். வெண்ணெய்நல்லூரில் வழக்காடி ஆண்டவன் ‘ தனது அடிமை சுந்தரன் ’ என்பதை அறிவித்தான். ‘ சொற் றமிழ் பாடுக ’ என்ற ஆண்டவனேப் ‘ பித்தா பிறைசூடீ ’ என்று பாடினுர்.

தில்லே சென்ருர். ‘ ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள ’ ஆண்டவனே வணங்கிப் பின் திருவாரூர் வந்தார். ஆண்டவனின் கருணேயால் பரவையைக் கண்டு காதல் கொண்டு மணந்தார். ‘ பன்னுளும் பயில்யோகம் பரம்பரையின் விரும்பினுர் ’ என்றபடி பரவைநாச்சியாரோடு வாழ்ந்துவந்தார் சுந்தரர். பின் ஒற்றியூரில் ஆண்டவன் கட்டளேப்படி சபதம் செய்து கொடுத்துச் சங்கிலி யாரை மணந்தார்.

வசந்தகாலம்வர, ஏழையேன் பிரிந்திருக்க முடியாது ; என் ஆரூர் இறைவனைக் காணவேண்டும் என்ற எண்ணத்தால் ஒற்றியூர் கடந்தார். கண்களை இழந்தார். திருவேண்பாக்கத்தில் ஊன்றுகோலும், காஞ்சியில் இடக்கண்ணும், திருவாரூரில் வலக் கண்ணும் பேற்று ஆண்டவனைப் பரவையிடம் இருமுறை தூது சேலுத்திப் பரவையை மீண்டும் பேற்றார்.

'' ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யுந் துரிசுகளுக் குடனாகி
மாழையொண் கண்பரவையைத்தந் தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கே னென்னாரூ ரிறைவனையே ''

என்ற பாடலில், 'யான் செய்யும் துரிசுகளுக்கு உடனாய்' என்று கூறும்போது, இறைவனிடம் தனக்கு உள்ள நேருங்கிய தோழமையைப் புலனாக்குகிறார். இவ்விதம் தம்பிரான்தோழராக விளங்கிய சுந்தரர் இறைவனால் அனுப்பப்பட்ட வேள்ளையானை யின்மேல் ஏறிக் கயிலை சேன்று எம்பெருமானை வணங்கி இன்புற்றார்.

10—5—60 நான்காவது திருநாள்

திரு. V. K. கிருஷ்ணமூர்த்தி M. L. A. அவர்கள் (வேலூர்) '' தேய்வத் தமிழ் '' என்ற போருளில் ஆற்றிய சோற்போழிவுச் சுருக்கம் :-

மாணிக்கவாசகர் இயற்றிய திருக்கோவையார் சிறந்த இலக்கிய நூல் மட்டுமன்று - அனுபவ நூலும் ஆகும். திருக் கோவையார் வாழ்வியலைக் கூறுவது. அது ஒரு தோத்திர நூலாகவும் உள்ளது என்னை நன்றாக இறைவன் படைத்தனன். தன்னை நன்றாகத் தமிழ்ச் சேய்யுமாறே - என்று திருமூலர் கூறியதைப் போல - மணிவாசகர் தித்திக்கும் தீந்தமிழால் கடவுளுக்குக் கவிமாலை சூட்டினார். நாட்டில் நலம்பெருக, சைவம் பரவக் கடவுளால் அனுப்பப்பட்டவர் இவர் - என்பர். சேக்கிழாருக்குத் தமிழில்பாட 'உலகெலாம்' என்று அடி யெடுத்துக் கோடுத்தார் இறைவன். இறைவனைச் சுந்தரர் 'பண்ணார் இன்தமிழாய் பரமாய பரஞ்சுடரே' என்றுவிளக்குகிறார்.

'தழல்புரை சுடர்க் கடவுள் தந்த தமிழ் தந்தான் என்று முள தேன்தமிழ் இயம்பி இசைகொண்டான்' என்று தெய்வத் தமிழ் பேசப்படுகிறது.

திருமதி. சௌந்தரம் கைலாசம் அவர்கள் (சென்னை) "மணிவாசகத்தில் பெண்மணிகள்" என்ற சொற்பொழி வாற்றியதின் சுருக்கம் :-

பிறவியில் மிக உயர்ந்த மனிதப் பிறவியால் நாம் செய்ய வேண்டிய செயல்கள் மிகப்பல. ஆண்டவன் கடையூழி காலத்தில் தன் தனிமையைக் கழிக்கத் திருவாசகத்தினை எழுதி வைத்துக்கொண்டான் என்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளை,

"வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவை கலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே."

என்று பாடும் பெருமை படைத்த காவியம் திருவாசகம்.

மணிவாசகர் தமது நூலில் இறைவனை "ஒருநாமம் ஒரு ருவம் ஒன்றுமில்லாதவன்" என்றும், "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிபவன்" என்றும் வானாகி மண்ணாகி வளியாளி ஒளியாகி - இருப்பவன் என்றும் பத்தி வலையிற் படுபவன்' என்றும் பாடி பெண்களின் கழங்கு, அம்மானை' ஊசல் ஆகிய பாடல்களையும் பொற்சுண்ணம் இடித்தல், பூவல்லி கோய்தல் - போன்ற செயல்களையும் தனித்தலைப்பு கொடுத்துப் பாடுகிறார். அப்பெண்கள் அச்செயலைச் செய்யும் போதும் 'இறைவன் கழலையே ஏத்தி மகிழ்ந்து பாடுவதாகக் குறிப்பிடுகின்றார். அதிலிருந்து 'எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் பெண்கள் - ஆண்டவன் புகழையே பாடி மகிழ்கின்றார்கள் என்பதை நாம் திருவாசகத்தின் மூலம் காண்கின்றோம்.

தாம்பரம், கிறித்துவர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், புலவர், திரு. N. R. முருகவேள் M. A., M. O L., அவர்கள் "திருக்கோவையார்" என்ற தலைப்பில் பேசியதன் சுருக்கம்:-

கட்டளைக் கலித்துறைச் செய்யுட்கள் நானூற்றைக்கொண்ட நூல் இது. தொல்காப்பியர் கண்ட எட்டு மெய்ப்பாடுகளையும் எடுத்தாண்டு அருள் மெய்ப்பாட்டை அறிமுகம் செய்தார். 'மெய் தான் அரும்பி' என்ற பாடல் சான்றாகலாம். குறிஞ்சி முதலான ஐந்திணைகளையும் சாக்ரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்ற வகையில் கூறுகிறார். ஒவ்வொரு துறையிலும் ஆன்மாவைத் தலைவியாகவும், திருவருளைத் தோழியாகவும், ஆண்டவனைத் தலைவனாகவும் இப்படி வைத்து ஆன்மாவின் ஆசை ஆண்டவனை அடைதலே என்ற முறையில் திருக்கோவையாரை இயற்றியுள்ளார் மணிவாசகர்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் சொல்லின் செல்வர் டாக்டர், திரு. R. P. சேதுப்பிள்ளை B. A., B L., அவர்கள் "திருவாசகமும் போப்பையரும்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றிதன் சுருக்கம் :-

பெஸ்கின் (வீரமா முனிவர்), கால்டுவெல், போப் இந்த மூவரும் தமிழகத்துக்குச் செய்துள்ள தொண்டுகள் மிகச் சிறந்தன. திருவாசகம் திருக்குறள், நாலடியார் - மூன்றையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பெரியார் G E. போப் அவர்கள். 1900 ஆண்டு தனது பிறந்தநாள் பரிசாக திருவாசகத்தை முடித்துக் கொடுத்தார். அவருக்கு இந்தப்பணியில் ஊக்கம் கொடுத்த பெரியார் நூல் வெளியான சமயம் இவ்வுலகைவிட்டு மறைந்துவிட்டார். இவைகளை எல்லாம் தனது திருவாசக முகவுரையில் குறித்துள்ளார. 'தமிழ் மாணவன்' - என்று தன்னைத் தனது கல்லறையில் குறிக்கச்சொல்லி பெருமை அடைந்தார். தமிழர்கள் செய்நன்றி மறக்காமல் அவர்களுக்கு வணக்கம் செய்தல் கடன். வாழ்வு சிறக்க திருவாசகம் படித்து சிறத்தல் வேண்டும். (தொடரும்)

பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், திரு. செ. செல்வப்ப முதலியார் பாடியது.

வேம்பிற் பழகிய மாந்தர்க்குக் கைப்பறு மெல்லியரேட்
காம்பிற் பழகிய மாந்தர்க்கு மொய்ம்பறுங் காட்டிருந்து
நோன்பிற் பழகிய மாந்தர்க்கு மாலறு நோக்கரிய
பாம்பிற் பழகிய மாந்தர்க் குயிரறும் பைந்தொடியே.

உடல் வளர்க்கும் மூலிகைகள்

திரு. V. பலராமையா B., A., B. L., அவர்கள்,
District Magistrate, Cuddalore.

(மலர் 19, இதழ் 6, பக்கம் 331 இன் தொடர்ச்சி)

சீந்திற்கொடி 4

Tinospora Cordifolia. Tel: Thippa Thuga. Mal: Amrutha. Sans: Gudichi.

இது மலைகளிலும் ஆற்றோரங்களின் படுகைகளிலும் சம வெளிகளிலும் உண்டு. இக்கொடியை நம் வீட்டு அலங்காரப் பந்தல்களின் மேல் போட்டுவிட்டால் தானகவே படர்ந்து வேர்கள் மேலிருந்து கீழிறங்கி ஊன்றிக்கொள்ளும். மண்ணில் கொடியை ஊன்றவேண்டிய அவசியமில்லை. தண்ணீர் ஊற்றுமல் காற்றிலேயே (Ether) ஜலசத்துப்பெற்று உயிர் வாழும். இதற்கு சாகா மூலி என்றும் ஆகாசவல்லி என்றும் சொல்வது உண்டு. ராமலிங்க சுவாமிகள் இது காயசித்தியைத் தரும் என்று எழுதியுள்ளார். தோட்டங்களின் மரங்களின் மேல் கொடியைப் போட்டுவைத்தாலும் போதுமானது. தானகப் படர்ந்து செழிக்கும்.

இம்மூலிகையில் எடுக்கும் சர்க்கரைமது மேகம் (Diabetis) நீரிழிவு வியாதிகளுக்குக் கைகண்டது. இதுவும் திரிதோஷ சமனிகளில் ஒன்று; ஆயுளை நீடிக்கும். ரத்தக் கொதிப்பை (Blood Pressure) குறைக்கும். உலர்ந்த கொடி துண்டுகள் நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும். ஆனுல் அவற்றைத் தைலங்களுக்கே உபயோகிக்கலாம். மூன்று விரல் கனத்திற்கு மேற்பட்ட கொடிகளே மேலானவை.

செய்பாகம்:

முற்றிய பச்சைக்கொடிகளைத் துண்டு துண்டாக நறுக்கி, மேல் சோறி தோலைக்கத்தியால் சுரண்டிவிடவும். பிறகு அதை நைய இடித்து ஒரு பெரிய பாண்டத்தில் இட்டு ஜலம் ஊற்றி

நன்ருகப் பிசைந்து குச்சிகளை அகற்றி 3 மணி நேரம் தெளிந்த பிறகு மேல் நீரை வடித்துக் கீழே கொட்டிவிடவும். அடியில் சீந்தில் சத்து நிற்கும். மறுபடியும் ஜலம் கொட்டி நன்ருகப் பிசைந்து ஜலம் தெளிந்த பிறகு முன்போல இறுத்துவிடவும். இப்படி 10 முறை செய்தபின் அடியில் நிற்கும் சத்து வெண்மை நிறமாயிருக்கும். அதைப் பீங்கான் தட்டில் ஊற்றி ரவியில் காயவைத்துப் பொடிசெய்து சலித்து சீசாவில் பத்திரப்படுத்துக. இதற்குச் சீந்திற் சர்க்கரை எனப்பெயர்.

இந்த சர்க்கரையை ஒன்று (அ) இரண்டு சிட்டிகைகள் கற்கண்டு தூள் சேர்த்து ஆகாரத்துக்கு முன் காலை மாலை சாப்பிடவும். வல்லாரை சூரணத்துடனும் சேர்த்து சாப்பிடலாம். சர்க்கரையைச் செய்ய சௌகர்யமில்லாதவர்கள் அக்கொடியைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி மேற் தோலைச் சன்னமாய் கத்தியால் சீவி பசும்பாலிலிட்டு அனலில் $\frac{1}{2}$ மணிநேரம் அவித்து எடுத்து உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக் கொண்டு கற்கண்டு சேர்த்து வெருகடி பிரமாணம் சாப்பிடலாம் (வெருகடி - மூன்று விரல்கள் சேர்த்து எடுக்கும் அளவு). இம்மூலிகை குழந்தைக்கும் கர்ப்பிணிகளுக்கும் கொடுத்தல் நலம். மலையாளத்தில் இதற்கு அம்ருதா என்று அழைக்கப் படுவதிலிருந்து இதன் பெருமையை விரித்து எழுத அவசிய மில்லை.

சீந்திற்கொடி தைலம் (தலைக்கு)

சீந்திற்கொடி இரண்டு அங்குல நீளமாக துண்டு செய்தது வீசை	½
வெட்டிவேர் (நறுக்கிக்கொள்ளவும்) பலம்	5

இவை இரண்டையும் ஒரு பெரும்பானையிலிட்டு 8 படி தண்ணீரிட்டு ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் அடுப்பேற்றி நீர் ஒரு படியாய் சுண்டிய அளவுக்கு எடுத்துப் பிசைந்து பிழிந்து கஷாயத்தை எடுத்து வடிகட்டிக் கொள்ளவும். பிறகு அக்கஷாயத்தை ஒருபடி எள்ளெண்ணெயில் கொட்டி மிளகு தக்காளி (மணத்தக்காளி) கீரை இலையுடன் நறுக்கி அதி லிட்டு அடுப்பிலேற்றி சிறு தீயில் காய்ச்சவும். தண்ணீர் சிடுசிடுப்பு அடங்கும் சமயம் நாட்டு மருந்து கடையில் விற்கும்

வாசனைத் திரவியம் நாலணுவுக்கு வாங்கிப் போடி செய்த அந்த எண்ணையிலிட்டு அடுப்பிலிருந்து இறக்கிவைத்து ஆறியபின் வடித்துப் புட்டியிலிடவும்.

இந்த எண்ணையை வாரத்திற்கிருமுறை அல்லது ஒரு நாள் எண்ணை ஸ்நானம் செய்து வர உடலிலுள்ள மேக வியாதிகள் குணமாகும். கண்குளிர்ச்சியடையும். உடலிலுள்ள காந்தல் தணியும், இளநரை வராது. (தொடரும்)

பார்வையாளர் குறிப்புப் புஸ்தகத்து நகல்.

தருமபுர ஆதீனம்

ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானம், திருப்பனந்தாள்.

இன்று முதல் அமைச்சர் அவர்களுடன் திருப்பனந்தாள் ஆலயம் தரிசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததை வரவேற்கின்றேன். ஆலயம் நல்ல முறையில் நடந்துவருவது மனதுக்கு மகிழ்ச்சியையும் சாந்தியையும் அளித்தது. இதன் நிர்வாகமும் சிறப்பாக இருப்பது போற்றற்குரியது.

(ஒ-ம்) R. வேங்கட்டராமன்
23—5—60. (ஒ-ம்) காமராஜ்

தருமபுர ஆதீனம். ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.

மனதுக்கு அமைதி அளிப்பது கோவில். சுத்தமாகவும், பக்தியுடனும் அமைந்திருக்குமானுல், வழிபடுவர்கள் மகிழ்ச்சியடைவார்கள். இந்த தேவஸ்தானம் இவ்விரண்டு குணங்களையும் சிறப்பாகப் பேற்றிருக்கின்றது. நல்ல முறையில் நடந்து வருவதை நான் பாராட்டுகிறேன்.

(Sd.) ஆர், வேங்கட்டராமன், 7—2—60,

சட்டைநாதர் தேவஸ்தானத்தில் பிரம்மபுரீஸ்வரர், திருநிலை நாயகி, ஞானசம்பந்தர் மூவரையும் தரிசித்து வணங்கினேம். அன்று ஞானசம்பந்தருக்கு அருள் ஞானம் குழைத்து அமுதூட்டிய அன்னை இன்று உலகுக்கே அமுதூட்டுகின்ருள். கோவில் நிர்வாகம் சிறப்பாக இருக்கிறது. பேரியதொரு கோவிலை சுத்தமாக வைத்திருப்பதே அதற்குச் சான்று. எல்லோருக்கும் என் வணக்கம்,

(Sd.) தோ. மு, பாஸ்கரத்தொண்டமான்,
முன்னுள் கலேக்டர் திருநேல்வேலி, 26-1-

கோயில்களும் மடங்களும்

கோவைகிழார்,
திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் B. A., B. L., அவர்கள்

(1) கலாசார சேவை

நமது நாட்டுப் பெருங் கோயில்களும் மடங்களுமே நமது கலாசாரச் சிறப்பிற்குப் பிறப்பிடமும் வளர்ப்பிடமும் எனச் சொல்லலாம். அவ்வாறு கூறும்போது மேற்கு வாசனையில் திகழ்ந்த நமது இளைஞர்களுக்குச் சிறிது ஐயம் தோன்றும். சமயத்திற்கும் கலைக்கும் சம்பந்தமே இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் கலையின் மேம்பாட்டிற்குக் குறைவு நேரிடும் என்றும் அவர்கள் கூறுவார்கள். நமது சமய நிலையங்களின் உண்மை வளர்ச்சியை ஆராயாத குறைவினால் தான், இந்த எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட இளைஞர்களை சமய நிலையங்களுக்கு அழைத்துச் சென்று அவைகள் இருக்கும் சூழ்நிலையை நன்றாக ஆராயச்சொல்லிக் காண்பிக்கவேண்டும்.

மதுரை, நெல்வேலி, திருவரங்கம், சிதம்பரம், திருவண்ணாமலை போன்ற பெரும் நகரங்களுக்குச் செல்வோம். ஊர் நடுவில் ஆகாயத்தை அளாவிய கோபுரங்களைக் கொண்ட திருக்கோயிலைக் காண்போம். அதனைச் சுற்றிச் சதுரம் சதுரமாக மாடவீதிகளும் தேர்வீதிகளும் வெளிவீதிகளும் அமைந்திருக்கக் காண்போம். அகலமான தெருக்களிலே பற்பல தொழிலாளர் குடியிருக்கப் பாரப்போம். இந்த நகர அமைப்பைக்கண்டு மேல் நாட்டார்களும் வியந்து பாராட்டுகிறார்கள். கோயிலை அனுசரித்தே நகர அமைப்பு ஏற்பட்டது. நெசவு முதலிய தொழிலாளர்கள் தொகுதிகளாக இருக்கும் வண்ணம் அவ்வமைப்பு வைக்கப்பட்டது. கோயில் அதிகாரிகள் இவ்வித அமைப்பைத் தந்தார்கள் என்று கல்வெட்டுச் சான்று இருக்கிறது. சிலப்பதிகாரம் எழுதப்பட்ட காலம் முதல் நகர அமைப்பு ஒரு கலையாகப் போற்றப்பட்டது. ஆகவே கோயிலினால் நகர அமைப்புக்கலை வளர்க்கப்பட்டதல்லவா ?

இனி கோயிலுக்கு அருகே செல்லுவோம். தெப்பக் குளமும் நந்தவனமும் அதன் வெளிப்புறத்திலும் உட்புறத்திலும்

இருக்கக் காண்போம். தேப்பக்குளம் திருவிழாவில் தேப்ப உற்சவத்திற்கு மட்டுமல்ல. ஊர் மக்கள் குளிப்பதற்கும் நீந்துவதற்கும் பயன்படும். நந்தவனம் கோயில் வழி பாட்டிற்குப் பூ எடுப்பதற்கு மட்டுமன்றி ஊருக்கு அழகையும் செழுமையையும் தருவதற்கும் பயன்படும். கோயிலுக்குள் இருக்கும் தீர்த்தங்களோ குடிநீர் வசதி தருவன. ஆகவே, நீர்வசதி சுகாதாரம், இளைப்பாறல், தேகப்பயிற்சி முதலிய வைகளுக்கும் இவைகள் பயன்பட்டு வந்தன.

இனி கோயில் வாயிலுக்குச் செல்வோம். ஆகாயத்தை அளாவிய கோபுரங்கள், அழிக்க முடியாத வலிவு பொருந்திய கதவுகள் எளிதில் தாண்டமுடியாத கோட்டை மதில்கள், போர்க் காலங்களில் இவைகள் கோட்டைகளாகத் திகழ்ந்தன. திப்பு ஹைதர் சேனைகளாலும் தகர்க்க முடியாத மதில்கள் திருவண்ணாமலை, சிதம்பரம் கோயில்களில் உள்ளன. ஆகவே இராணுவக்கலை இங்கே தென்படுகின்றது அல்லவா ? ஒரு மதில் தகர்ந்தாலும் மற்றொரு மதில் உள்ளே உண்டு. ஆகவே நிரம்பிய சாகசத்தோடு அவைகள் உண்டாக்கப்பட்டன அல்லவா ? கோபுரங்களில் விசித்திர வேலைப்பாடுகள் தற்கால பொறியியல் (Engineers) வல்லாரை மயங்கச் செய்யும் சிற்பம் ஓவியம் இரண்டையும் காணுங்கள். சிதம்பரக் கோபுரத்திலே நாட்டியக்கலை முழுதும் தீட்டப் பெற்றுள்ளது. விருத்தாசலத் திலும் அதே காணலாம் ; ஆகவே, இவைகள் கலைகளுக்குப் பிறப்பிடம் அல்லவா ?

கோபுரத்திற்கு அடுத்தாற்போலத் தேரோடும் வீதியிலே மிகப் பெரிய தேர் ஒன்றும் அதைவிடச் சிறிய தேர்கள் சிலவும் நிற்கின்றன. இவை பிரம்மோற்சவங்களில் தெய்வங்களை எழுந்தருளப் பண்ணி உலாப்போவதற்குப் பயன் படுகின்றன. இத்திருவிழாக்களில் ஆடல், பாடல், நடனம், இன்னிசை முதலிய நற்கலைகள் பயிலப்படுகின்றன. ஆடல்களிலே நாட்டியம் முதலிய அருமையான கலைகளேயன்றி பொய்க்கால் குதிரை ஆட்டம் முதலிய கூத்துக்களும் உண்டு. பண்டைக் காலத்தில் தஞ்சையில் சாக்கைக் கூத்தும் இருந்தது. இப் போது குறவஞ்சி நடக்கிறது. தேவாராதி இன்னிசைத் தெய் வீகப் பாடல்களும் பாடப்படுவன. ஊதுகுழல் முதலிய அரிய இசையியங்களும் மக்களை மகிழ்விக்கும். இவ்விதக் கலைகள்

ஆலயத் திருவிழாக்களிலே பாராட்டப்படுகின்றன. மேலும் தேரின் அமைப்பைப் பாருங்கள். இறைவன் திரிபுராதிகளை எரித்தபோது ஏற்பட்ட தேரின் அமைப்பையே உறுதிப்படுத்து கிறதல்லவா? அது மரத்தினல் எல்லாவிதச் சிற்பக்கலையும் ஆக்கமுடியும் என்று கூறுகிறது. தேவதைகளின் திருவுருவங் களையும் திருவிளையாடற் செய்திகளையும் இங்கு பார்க்கலாம். சிற்பக்கலை தேர்க்கட்டிலும் நன்கு ஆராயப்பட்டது.

கோபுரவாயிலுக்கு உட்சென்ருல், பலவித மண்டபங்களைக் காண்கிருேம். நான்கு கால் முதற்கொண்டு 1008 கால்வரை உட்பட்ட மகத்தான மண்டபங்கள் தோன்றுகின்றன. இவைகள் கடலை போறி தின்றுவிட்டு அரட்டை அடிப்பதற்கும், சீட்டாடு வதற்கும் ஏற்பட்டவையல்ல. திருமறைகள் தேவாராதி இன்னிசைகள், புராணங்கள், சமய விரிவுரைகள் முதலியவை களை மக்களுக்குச் சொல்லுவதற்காகவே கட்டப்பட்டன. இயல் இசை நாடகம் என்ற முத்தமிழும் இங்கே பயிலப்பட்டது. பெரிய கவிஞர்கள் தாம் புதிதாக இயற்றிய நூலகளை இம் மண்டபங்களில் தான் அரங்கேற்றினுர்கள். திருத்தொண்டர் புராணம். கம்பராமாயணம் முதலிய அருமையான நூல்கள் திருக்கோயில் மண்டபங்களிலேதான் அரங்கேற்றப்பட்டன. சில கோயில்களில் வேதபாடசாலை, ஆகம பாடசாலை. இலக்கணப் பாடசாலை, முத்தமிழ்ப் பாடசாலை முதலியவைகளை நடத்தி மக்களுக்குக் கல்வி ஊட்டினுர்கள். இந்தப் பெருங் கலைகளை வைத்து நடத்துவதற்காக மன்னர்களும் ஏனைய செல்வர்களும் அளவிறந்த சோத்துக்களைத் தானம் செய் துள்ளார்கள். ஆகவே இம்மண்டபங்களே கல்விச் சாலைகளாக விளங்கின எனலாம்.

இம்மண்டபங்கள் சில குறிப்பிட்ட பயிற்சிகளுக்குப் பயன் படுத்தப்பட்டன. மறை ஓதுதல், நாட்டியம் இயற்றல் என் பவைகளுக்குத் தனி மண்டபங்கள் இருந்தன. பரத நாட்டியக் கலை கோயிலிலேதான் தோடங்கி வளர்ச்சியடைந்தது. வாகன மண்டபங்களிலே மரத்தினுலும், மண்ணினுலும், வர்ணங்களி னுலும் பிராணிகளின் உருவங்களை எப்படி செய்யக்கூடும் என்று அறிய முடியும்? ஆயுதங்கள் செய்தல் இசைக்கருவி களைச் செய்தல் முதலிய தொழில்களும் ஆலயங்களிலேயே தோடங்கின. சில கோயில்களிலே கல் நாகசுரம், பலவித

வேய்ங்குழல்கள், மர நாயனங்கள், பலவித கோம்புகள், பறைகள், குடமுழாக்கள், பஞ்சமுக வாத்தியங்கள் முதலிய நால்வகை இயங்களேயும் காணலாம். அம்மண்டபத்துக் கல் சிற்பங்களே பண்டைய தமிழ் இசைக்கருவிகளின் உருவங் களேயும் அவைகளே உபயோகிக்கும் முறைகளேயும் காட்டு கின்றன. நெல்லே, கிருஷ்ணபுரம் கோயில்களில் காணும் இசைக்கருவிகளின் உருவங்கள் சமீபத்தில் அண்ணுமலேப் பல்கலேக் கழகத்தார் இசைநூலில் வெளியிட்டுள்ளார்கள்.

இனி சிற்பம் ஒவியம் இவைகளேப் பற்றிக்கூற வேண்டின் கோயில் அல்லாமல் வேறு எந்த நிலேயத்தில் இக்கலேகள் வளர்க்கப்பட்டன என்று கேளுங்கள்? தமிழ்நாட்டுச் சிற்பக் கலே உலகத்திலேயே சிறந்தது எனக் கூறுதல் மிகை ஆகாது. நமது நாட்டுச் சிற்பியின் மனுேவேகமும் புத்தி கூர்மையும் கல்லின் கனிந்த கவிகளாக மாறியிருக்கின்றன. உயிர் அற்ற கல் உருவமாகி அறிவு படைத்து மிளிர்கிறது. பாத்திரங்கள் செய்யக்கூடிய வெங்கலமும் பித்தளேயும் தாம்பரமும் அழகிய திருமேனிகளாகி மண்டபங்களிலே திகழ்கின்றன. தெய்வீக உருவங்கள் ஒன்ருே? பலவித மிருகாதிகள், அதிசய உயிர் இனங்கள், கற்சங்கிலிகள், ஆயிர இதழ்த் தாமரைகள், பலவித ஆயுதங்கள், பண்டை இசைக் கருவிகள், அழகிய பூ வேலேகள் மானுட உருவங்கள், சிற்பக் கதைகள் இவைகள் எல்லாம் மண்டபத் தூண்களில் விளங்கக் காணலாம். இம் மண்ட பங்களில் இல்லாத கலேகளும் உலகில் உண்டோ என்ற கேள்வியும் எழும்பும்.

இனி, கர்ப்பக்கிரகத்தைக் கண்டால் அதில் விமானம் சமைத்திருக்கிற ஒழுங்கைக் காணலாம். கணித நூல்படி சிறிதும் பிழைபடாமல் ஏற்பட்டிருக்கும் வகை அங்கே உண்டு. விமானம் என்ற சொல்லிற்கே நன்ருக அமைக்கப்பட்டது என்பது பொருள். அதற்கு ஏற்ருற்போல் இவ்வழகிய நடு நிலேயம் ஏற்பட்டுள்ளது. நாயன்மார்கள் ஆழ்வாராதியர் திருவுரு வங்கள் அவர்களது வரலாற்றுச் சரிதங்களேயும் உள் மண்ட பங்களும் உட்கோயில்களும் நினேவுபடுத்துகின்றன. திருக் கோயிலுடைய முழு அமைப்பே உடலின் அமைப்பையும் அதன் கோசங்களேயும் காட்டுகின்றன. வேதாந்த சித்தாந்த உட்கருத்து திட உருவமாக இங்கே இருக்கக் காணலாம்.

இக் கலைகளை எல்லாம் திருக்கோயில்கள் அல்லாது வேறு எந்த சமயப்பற்றற்ற நிலையம் ஒருங்கே காட்டமுடியும் ?

மேலும் மடாலயங்களைச் சிறிது கவனிப்போம். மடங்கள் கடுந்துறவு பூண்ட பண்டைப் பெரியோர்களால் தாபிக்கப் பெற்றன. நாளுக்குநாள் அவைகள் வளர்ந்து சமயப் பிரசாரத்தைத் தன்னலமில்லாத சிறந்த முறையில் திருத்தொண்டு செய்துவந்தன. மடாதிபதிகள் நிரம்பக் கற்றவர்கள். அவர்களுடைய மாணுக்கர்களும் கற்றுத் தேர்ந்தவர்கள்; ஒழுக்கத்திற் சிறந்திருந்தார்கள். அவர்களுடைய கைங்கரியங்களைக்கண்டே அரசர்களும் செல்வர்களும் மானியங்களைத் தந்தார்கள். மடத்துப் பெரியவர்களும் யாதோரு கவலையும் இன்றி அறிவுநூல்களை ஆராய்ந்து எழுதினுர்கள். அவ்வாறு தமிழ்நாட்டில் சைவ வைணவ தத்துவ நூல்கள் அளவுகடந்து வெளிவந்தன. மற்றும் பலவகை இலக்கியப் பிரபந்தங்களும் தோன்றின. 17, 18, 19 ஆம் நூற்ருண்டுகளில் தமிழ் நாட்டைப் பிறநாட்டு மக்கள் கவர்ந்துகொண்ட காலத்தில் மடங்களே தமிழ்க்கலைகளை வளர்த்தன. ஆகவே கலையியல் வளர்ச்சிக்கு மடாலயங்களும் சிறந்த பிறப்பிடங்களாகித் திகழ்ந்தன.

ஆலய அதிகாரிகள் கலைகளில் அன்பு பூண்ட அறிவாளிகளாக இருக்கவேண்டும்; மடாதிபதிகளும் கலைகளில் சிரத்தை எடுத்துக் கொள்ளவேண்டும்; நமது நாட்டுப் பண்டைய மேன்மையை அறிந்தவர்களாக இருக்கவேண்டும்; நாட்டு அன்பு சமய அன்பு திகழ்ந்தவர்கள் ஆனுல் நமது கோயில்களில் உள்ள அற்புதப்பொருள்களில் ஒரு துணுக்கையாவது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாக விடுவார்களா! மதுரை மதனகோபால சுவாமி கோயிலில் இருந்த இராமாயணக்கதை முழுதும் கல்லில் தீட்டிய மண்டபத்தை அமெரிக்கா கண்காட்சிச்சாலைக்கு விற்று விட்ட மேதாவிகள் நாட்டுத் துரோகிகள் அல்லவா? இனிமேலாவது சிற்பங்களையும் அருமையான திருமேனிகளையும் வெளிச் சென்றிருந்தாலும் இனிமேல் போகவொட்டாமல் மீண்டும் கொண்டுவர அறக்காப்பாளர்கள் முயற்சிப்பார்களாக. பண்டைய கலைகள் இறந்து போகாமல் நிலை நிறுத்தும்பொருட்டு ஆடம்பரச் செலவுகளில் சிறிது குறைத்து 100க்கு பத்து விதமாகிலும் வருமானத்தை கலாசாரச் சேவைக்குச் செலவழிப்பார்களாக. நமது போது மக்களுக்கு ஆலயங்களில் உள்ள

பண்டைப்பெருமைகள் தெரியாது. அவைகளை அறிவிக்கச் சிறு நூல்கள் சித்திரப்படங்களோடு வெளியிடவேண்டும். மைசூரில் இந்த முறை கையாளப்பட்டு வருகின்றது. நமது மாகாணத்தில் கல்வெட்டுப் பகுதி, சிற்பப் பகுதி, என்ற அரசியல் பகுதிகள் உண்டு. அவர்களால் போதுமக்கள் எத்தனை பயன் பெறுகிறார்கள் என்று கேட்கலாம். ஆலயங்களைப்பற்றிய எளிய நூல்கள் நிரம்ப வெளிவரவேண்டும் சிற்பம், ஓவியம், நாட்டியம் முதலிய கலைகளை ஆலயச் செலவு கொண்டு பாடசாலைகள் ஏற்படுத்தி வளர்க்கவேண்டும் இவைகளுக்குச் செய்யும் செலவு வீண் அல்ல. இம்முயற்சியில் மக்கள் ஊக்கம் தருவார்களாக! (தொடரும்)

பார்வையாளர் குறிப்புப் புத்தகத்து நகல்

தருமபுர ஆதீனம், வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்

இன்று தெய்வத் திருவருள் எம்மை ஆட்கொண்டு புள்ளிருக்கு வேளூர் திருத்தலத்தில் வழிபட வழிகாட்டியது. செல்வமுத்துக் குமாரப்பெருமான் திருக்காட்சியும், பிணி தீர்க்கும் பெம்மானும் வைத்தியநாதரின் அருட்காட்சியும் என்னையும் உடன்வந்த தொண்டர்களையும ஈர்த்தாட்கொண்டது.

குமரகுருபர முனிவர் தருமையாதீன மாணவ மணியாய்ப் புள்ளிருக்கு வேளூர்க்குகனைப் போற்றிப் பாடிய பாடல்கள் இவ் வாதீன ஓதுவாமூர்த்திகள் வாயிலாக எம் உள்ளக் கழனியைச் செம்மையாக்கியது, கசிந்துருகச் செய்தது. அருண்மிகு தருமை யாதீனக் குருமணியவர்கள் எம்போன்ற அடியவர்பால் காட்டுகின்ற கருணைப்பெருக்கை அளவிட்டுரைத்தால் அது சிற்றுரையாய், வெளிற்றுரையாய் முடியும். அவர்கள் அருட்கருணைக்கு என்றும் உரியோம், கடப்பாடுடையோம்.

இங்கு இத் தெய்வ நிலயத்தைப் பேணிவரும், தவத்திரு கட்டளைத் தம்பிரானடிகளும் திருத் தொண்டாற்றும் கோயிற் பணியினரும் காட்டும் அன்பும் பண்பும் எவரையும் ஒன்றுபடுத்தும் நிலையில் உள்ளன. திருக்கோயிலின் தூய்மையும் வழிபாட்டு மறையும் என்றும் மறத்தற்கு இயலாது. வழிபாட்டை வளர்ப்பனவாக அமைந்துள்ளன. தருமையாதீனம் தமிழகத்தின் வழிபாட்டுநெறிக்கே வழிகாட்டுவதாய், தமிழ்நெறியும் சைவமும் வளர்வதற்குரியதாய் இத்தெய்வத்தானத்தைப் பேணி வருவது பெரிதும் போற்றத்தக்கது. வளர்க தருமைத் திருப்பணி. வளர்க சைவமும் தமிழும்.

(ஒம்) இராமசாமியடிகள், சாந்தலிங்க அடிகளார் திருமடம்,
திருப்பேரூர், கோவை 18-4-60.

செய்திகள்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூசைத் திருநாள்

அன்னம் பாலிப்பு

தருமபுர ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூசைத் திருநாளைக் குறித்து ஏழைகட்கும் அடியவர்கட்கும் அன்னம்பாலிப்பு நடைபெறுவதுபோல இவ்வாண்டும் 16—5—60 திங்கட்கிழமை யன்று பல இடங்களிலும் அன்னம் பாலிப்பு நடைபெற்றது.

தருமபுரம் ஆதீன மடாலயத்தில் மேலக் குருமூர்த்தத்திலும், மதுரையில் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் ஆலயத்திலும், சிதம்பரத்தில் ஸ்ரீ காசிமடத்துத் தெருவிலுள்ள தருமபுர ஆதீன மடத்திலும், ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் அவதார ஸ்தலமாகிய ஸ்ரீ வில்லிபுத்தூரில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர் பள்ளியிலும், சிவசைலத்தில் தருமபுர ஆதீன மடத்திலும், ஸ்ரீ காசியில் கேதார கட்டத்திலுள்ள குமாரசாமி மடத்திலும் இராமேஸ்வரத்தில் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துக்குச் சொந்தமான மடத்திலும் அன்னம் பாலிப்பு சிறப்புற நிகழ்ந்தது. பல அடியவர்களும் ஏழை எளியமக்களும் வந்து கலந்துகொண்டு பயன் பெற்றனர் அங்கங்கே சமயச்சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

திருவாரூரில்

தருமபுர ஆதீனம் திருவாரூர் தெற்கு வீதியிலுள்ள இராஜன்கட்டளை மடத்தில் பகல் 12 மணி அளவில் அன்னம் பாலிப்பு நடைபெற்றது. மாலை 6 மணிக்குத் திருவாரூர் பூங்கோயிலில் விசேஷ அர்ச்சனை ஆராதனைளும் சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

திருநெல்வேலியில்

தருமபுர ஆதீனம் திருநெல்வேலி சிந்துபூந்துறை ஸ்ரீ திருஞானசம்பந்தர் நிலையத்தில் காலை 11 மணி அளவில் அன்னம் பாலிப்பும் மாலை சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்ந்தன.

சென்னை சமயப் பிரசார நிலையத்தில்

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் (வேலூர் தேவஸ்தான இறைபணி மன்றம்) 16—5—60 திங்கட்கிழமையன்று காலை 11 மணிக்கு ஸ்ரீ குரு ஞானசம்பந்தர் குருபூசைத் திருநாளைக் குறித்து ஏழைகளுக்கும் அடியவர்கட்கும் அன்னம்பாலிப்பு நடைபெற்றது. இரவு 7-மணிக்கு வித்துவான் திரு. T. முத்து. கண்ணப்பர் B. A., M L. C அவர்கள் தலைமையில் புலவர், திரு. N. R. முருக வேள் M. A., M. O. L. (தாம்பரம் கிறித்தவர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்) குருஞானசம்பந்தர் அஷ்டகம் என்ற தலைப்பில் பேசினார்கள். குருஞானசம்பந்தர் வரலாற்றைக் குமாரி, கௌரி குழுவினர் கதாகாலக்ஷேபமாகச் செய்தனர்.

தருமையாதீனத்தில்

மகாகும்பாபிஷேகம்

திருக்கயிலாய பாம்பரைத் தருமையாதீனம் மூன்றாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், ஐந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் திருக்கோயில்களாகிய குருமூர்த்தங்களின் மகாகும்பாபிஷேகம் சார்வரி ஆண்டு வைகாசித்திங்கள் 19 ஆம் நாள் (1—6—60) புதன் கிழமை காலை 7 மணிக்கு மேல் 9 க்குள் மிக்க சிறப்பாக நடைபெற்றது. 31—5—60 மாலை, 1—6—60 காலை ஆகிய இவ்விரு வேளைகளிலும் யாகசாலை பூஜைகள் நடைபெற்றன.

இவ்விரு குருமகாசந்நிதானங்களின் திருக்கோயில்களைப் புதிதாகக் கட்டுவித்துக் கும்பாபிஷேகத்தையும் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் நிகழ்த்துவித்தார்கள். அன்பர்கள் வந்து தரிசித்து உய்ந்தனர்.

இக்கும்பாபிஷேகத்தை யோட்டித் திருமஞ்சன வீதியில் உள்ள விநாயகர் திருக்கோயில், தருமையாதீனம் 4 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருக்கோயில் ஆகிய இவ்விருகோயில்களுக்கும் கும்பாபிஷேகம் நடைபெற்றன.

குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது 15 ஆவது ஆண்டு குருபூஜை விழா 3—6—60 வெள்ளிக்கிழமையன்று மிக்க சிறப்பாக நடைபெற்றது. இரவு 7 மணிக்கு ஆதீனம் ஸ்ரீ சொக்கநாதர் ஆலயத்திலிருந்து 25 தட்டுகளில் பழம் முதலியன வைக்கப்பெற்ற வரிசைப்பொருள்களை எடுபிடிகள், மேள வாத்தியம் முதலியவற்றோடு ஆதீன அலுவலர்கள் வலமாகக் குருமூர்த்த ஆலயத்திற்கு எடுத்து வந்தனர். காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் குருமூர்த்த ஆலயத்திற்கு எழுந்தருளி வழிபா டாற்றினார்கள்.

விழாமலராக "துவாதச ஜ்யோதிர்லிங்கம்" என்ற நூல் வெளியிடப்பெற்றது. மாயூரம் முதலிய இடங்களிலிருந்து அன்பர்கள் பலர் வந்து வழிபட்டனர். அன்பர்களுக்கு பிரசாதம் வைக்கப்பெற்ற பையும், துவாதச ஜ்யோதிர்லிங்கம். என்ற நூலும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர் களால் வழங்கப்பெற்றன.

காலை மாலை இருவேளைகளிலும் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. இரவு 8 மணிக்கு சென்னை, திருமதி. பிருந்தா, முக்தா குழுவினர் இன்னிசை ஆதீன மடாலய முகப்பில் உள்ள திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் நடைபெற்றது.

பாராட்டு விழா

தருமையாதீன மடாலயத்திலுள்ள திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் தருமை ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகச் சார்பில் 15—5—60 அன்று திருக் கயிலாய மலையை 375 முறைகளுக்கு மேல் வலஞ்செய்து அங்கேயே தங்கியிருந்து மோனத்தவம் பெருக்கும் மௌனி

பாபா என வழங்கும் ஸ்ரீமத் சுவாமி முக்தானந்தா அவர்களுக்குப் பாராட்டு விழா நிகழ்ந்தது. அதில் ஒரு பாராட்டுரையும் வாசித்தளிக்கப்பெற்றது. சுவாமிகள் மறுமொழி கூறும் முறையில் தமக்கே யுரிய முறையில் பஜனை நிகழ்த்தினார்கள்.

16—5—60 திங்கட்கிழமை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் திருக்கயிலாய மலைத் தரிசனத்திற்கு எழுந்தருளியபோது உடன் சென்றுதவியவரும், திருக்கயிலாய யாத்திரையைப் பலமுறை புரிந்தவரும் நைனிடால் கீதாசத் சங்கத்தலைவரும் ஆகிய 108 ஸ்ரீ சுவாமி வித்யானந்த சரசுவதி அவர்களுக்குப் பாராட்டு விழா நிகழ்ந்தது. பாராட்டுரையும் வாசித்தளிக்கப்பெற்றது. சுவாமிகளும் மறுமொழி கூறி நன்றி தெரிவித்துக்கொண்டார்கள்.

வேளூரில் வசந்தோற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் சார்வரி ஆண்டு வைகாசித்திங்கள் 16 ஆம் நாள் தொடங்கி 26 ஆம் நாள் முடிய உள்ள நாட்களில் (29—5—60 — 7—6—60) வசந்தோற்சவம் மிக்க சிறப்பாக நடைபெற்றது. விழா நாட்களில் விசேஷ மேளக் கச்சேரிகளும் 3—6—60 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு சென்னை, திருமதி பிருந்தா, முக்தா குழுவினரின் இன்னிசையும் நிகழ்ந்தன.

திருக்குவளையில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் திருவிழா 21—5—60 முதல் தொடங்கி 7—6—60 முடிய உள்ள நாட்களில் சிறப்புற நிகழ்ந்தது. திருவிழா நாட்களில் விசேஷ நாதசுரக் கச்சேரிகளும், சமயச் சொற்பொழிவுகளும், கதாகாலக்ஷேபமும் நிகழ்ந்தன.

சீகாழியில் ஸ்ரீ முத்துச்சட்டைநாதர் புறப்பாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் திருக்கோவில்களில் ஸ்ரீ சட்டநாதசுவாமி திருக்கோவிலும் ஒன்று. இது

சமயாசாரியர் நால்வருள் ஸ்ரீ திருஞானசம்பந்தர் தோன்றிய தலம். ஞானப்பால் பெற்ற தலம். இவர் உமையம்மையால் ஞானப்பால் ஊட்டப்பெற்ற பெருமையுடையவர். ஸ்ரீ சட்டநாதர் மலை உச்சியில் எழுந்தருளியுள்ளார். இவர் சாதாரணமாக உக்ரமூர்த்தி என்று கருதப்படுபவர். மலைக்கோவிலுக்குத் தரிசனத்துக்குப் போகிறவர்கள் ஆசார சீலர்களாக இருக்க வேண்டும். வெகு காலத்திற்குமுன் இதன் உற்சவர் புறப்பாடு நடந்து நின்றிருக்கிறது. சில வருஷங்களாக தருமையாதீனத்தில் தற்போது 25ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியுள்ள ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் திருவுள்ளத்தின்படி வருஷத்துக்கொருநாள் சட்டைநாதர் புறப்பாடு செய்து பிரகாரம் உலா வருகிறது. தீவட்டிக்கு நெய்தான் பயன்படுத்தவேண்டும். பிராமணர்கள்தான் சுவாமி எழுந்தருளச்செய்தல் தீவட்டி பிடித்தல், நடைபாவாடை போடுதல், எடுபிடி எடுத்தல் முதலிய சகல காரியங்களும் செய்தல் வேண்டும். முன்பின் சென்று நடனம் செய்துகொண்டு பிராகாரம் உலாவந்து பக்தர்களுக்குக் காட்சி அளித்து யதாஸ்தானத்திற்கு எழுந்தருளியாகும். ஏராளமான பக்தர்கள் தரிசிப்பார்கள். உற்சவருக்கு அன்று பெருந்திட்டத்தில் அபிஷேகம் நடைபெறும். அலங்கரிக்கப் பட்டவெள்ளி மஞ்சத்தில் சகல ஆபரணங்களுடன் புறப்பாடு நடைபெறும். மூலவருக்கு என்றும் அபிஷேகம் கிடையாது. புனுகாப்பு சாத்துபடி, வடைமாலை அணிவிப்பு நடைபெறும். இந்த வருஷம் 27—5—60ல் இந்தப் பெருவிழா நடைபெற்றது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளியிருந்து சுவாமி புறப்பாடு செய்து உடன் இருந்து விமரிசையாக நடத்தி வைத்தார்கள். பக்தி வெள்ளத்தில் எல்லோரும் அமிழ்ந்திருந்தார்கள். சுவாமிப் பிரசாதம் அன்பர்களுக்கு வழங்கப்பட்டது.

ஆச்சாள்புரத்தில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் 29—5—60 முதல் தொடங்கி 7—6—60 முடிய உள்ள நாட்களில் பிரமோற்சவம் மிக்க சிறப்பாக நடை

பெற்றது. 9—6—60 வியாழக்கிழமை இரவு திருஞான சம்பந்தர் திருக்கல்யாணமும், ஐக்கியமும் சிறப்புற நிகழ்ந்தன. அன்று சென்னை மாநில அறநிலைய ஆணையர் உயர்திரு. அ. உத்தண்டராமப் பிள்ளை B. A., B. L., I. A. S. அவர்கள் வந்து வழிபட்டு மகிழ்ந்தார்கள்.

அன்று விழா மலராகத் திருஞானசம்பந்தர் வரலாறு வெளியிட்டு வழங்கப்பெற்றது. வெளியீட்டு விழாவிற்கும், திருமுறை விழாவிற்கும், தேவார வகுப்பு ஆண்டு விழாவிற்கும் சென்னை மாநில அறநிலைய ஆணையர் அவர்கள் தலைமை வகித்து நூல் வெளியீட்டு விழாச் சொற்பொழிவாற்றி தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகளும் வழங்கினார்கள். கயப்பாக்கம் திரு. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள் ''சிரபுரச் செம்மலும் சீவகாருண்யமும் என்ற தலைப்பிலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சிப் புலவர், வித்துவான், திரு சே. வேங்கடராமச் செட்டியாரவர்கள் ''திருஞானத் திருமுறைப் பயன்'' என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினார்கள். பண்ணிசைவாணர்களின் திருமுறைப் பாராயணத்தோடு திருமுறைகள் யானைமேல் திருவீதியுலாவாகக் கொணரப் பெற்றன.

2—6—60 மாலை திருவிடைமருதூர் வித்துவான், திரு. நடராச தேசிகர் அவர்கள் ''நமச்சிவாயத்திருப்பதிகம்'' என்ற தலைப்பிலும், 5—6—60 மாலை சிதம்பரம் பச்சையப்பன் உயர் பள்ளித் தமிழாசிரியர் வித்துவான், திரு. ச. சேதுசுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் ''கல்லூர் பெருமணத் திருப்பதிகம்'' என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினார்கள்.

திருப்பனந்தாள் தேவஸ்தானத்திற்கு அமைச்சர்கள் வருகை

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ் தானத்திற்கு 23—5—60 திங்கட்கிழமை மாலை 6-30 மணிக்கு சென்னை மாநில முதல் அமைச்சர் கனம். திரு. கே. காமராஜ அவர்களும், சென்னை மாநிலத் தொழில் அமைச்சர் கனம். திரு. ஆர். வேங்கட்டராமன் அவர்களும் வருகை புரிந்தார்கள்.

ஆலயத்திற்கு வரும் அமைச்சர் முதலியவர்களை வர வேற்கும் முறையில், மேளம் முதலிய வாத்தியங்களோடும், ஆலயத்தில் செய்யப்பெறும் பூர்ணகும்பம் முதலிய எல்லாவித மான மரியாதைகளுடனும் ஆலயத்தின் இராசகோபுர வாசலில் ஆலய நிர்வாகஸ்தர்கள் வந்திருந்து வரவேற்றனர். திருப் பனந்தாள் தேவஸ்தானம் கட்டளை விசாரணை சுவாமிகள் அவர்கள் அமைச்சர்களுக்கு மாலைகள் போட்டு வரவேற்று உடனிருந்து சுவாமி தரிசனம் செய்வித்தார்கள். அறம்வளர்த்த நாயகி அம்பாள் சந்நிதியில் அமைச்சர்களுக்குப் பட்டு கட்டப் பட்டு பிரசாதம் வழங்கப்பெற்றது. ஆலயத்தின் கட்டகோபுர வாசலில் அமைச்சர்கள் வந்ததும் நிழற்படம் ஒன்று எடுக்கப் பட்டது.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையம்

"வேளூர் தேவஸ்தானம் இறைபணி மன்றம்"

தக்கோலத்தில் சமயப்பிரசார வழிபாட்டுக் கூட்டம்

சென்னைத் தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப்பிரசார வழிபாட்டுக் கூட்டம் 5—6—60 ஞாயிறு மாலை தக்கோலம் என வழங்கும் திருவூறலில் நடைபெற்றது. சச்சிதாநந்த முதலியார், கோவிந்த முதலியார், மார்க்கசகாயஞ் செட்டியார், திருக்கோயில் அர்ச்சகர் ஊர்ப்பொதுமக்கள் ஆகியோர் திரளாக வந்து பூர்ணகும்பம் மேள வாத்தியங்களுடன் பிரசார குழுவி னரை வரவேற்றனர். மேள வாத்தியத்துடனும் அரகர முழக்கத் துடனும் பிரசார குழுவினர் மாட வீதியை வலம் வந்தனர். ஸ்ரீ கங்காதரர் கோவிலிலும், உபாதீசுவரர் கோவிலிலும் முறைப் படி வழிபாடாற்றினர். சுவாமி சந்நிதியில் சங்கீத பூஷணம் திரு. P. சுவாமிநாதன் அவர்கள் அவ்வூர்த் தேவாரப் பதிகத்தை இசையோடு ஓதி எல்லோரையும் இறைவனிடம் ஈடுபடுத்தினர்.

வழிபாட்டிற்குப் பிறகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி மண்டபத் தில் சமயப் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. திரு. என். டி. கிருஷ்ணசாமி பி. ஏ., பி. எல்., வி. நடராசன் பி. எஸ். சி., கைவண்டூர் இராஜா முதலியார், ஆர். ஜெகந்நாதன் எம். ஏ.,

முதலியவர்கள் தொண்டைநாட்டின் சிறப்பையும், பெற்ரோர் கடமைகளையும், சிவாலய வழிபாட்டு முறையையும், வேளாண் தொழிலின் மேன்மையையும் பற்றி விரிவுரை நிகழ்த்தினர்கள். சச்சிதானந்த முதலியார் ஊர்ப் பொதுமக்கள் சார்பில் பிரசார குழுவினருக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தார். கூட்டத்திற்கு தலைமை வகித்த பிரசார நிலையம் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளவர்கள் பேசுகையில் தக்கோலம் கோயில்களிரண்டும் பழுதடைந்திருப்பதைக் குறிப்பிட்டு இம்மாதிரியான கோயில்கள் சான்ரோர் வாழும் தொண்டைநாட்டில் பழுதடைந்திருப்பது தொண்ட நாட்டையும் அதிலும் இவ்வூர் வாசிகளின் குறையைத்தான் எடுததுக்காட்டும் என்றும், மக்கள் வளமாக வாழவேண்டுமானல் கோயில்களும் கோயில் பூசைகளும் ஆகம வழிப்படி ஒழுங்காக நடைபெற வேண்டும் என்றும் இவை சரியாக நடைபெருவிட்டால் நாட்டிற்கும் ஊருக்கும் தீமை உண்டாகும் என்றும் திருமூலர் திருமந்திரத்தில் குறிப்பிட்டுள்ள வாறு கூறினர்கள். மேலும் ஊர்ப்பொதுமக்கள் முயற்சி எடுத்தால் மற்ற அன்பர்களும் உதவி செய்ய முன் வருவார்கள் என்றும், அரசாங்கம உதவி செய்ய வாக்களித்திருப்பது தெரிந்து தாம் மகிழ்ச்சி அடைவதாகவும் குறிப்பிட்டார்கள்.

சச்சிதானந்த முதலியார், மார்க்கசகாயஞ் செட்டியார் முதலியோர் வழிபாட்டுக் குழுவுக்கு மாலை சிற்றுண்டியும் இரவு உணவும் அளித்துப் போற்றினர்கள். சச்சிதானந்த முதலியார் நன்றி கூற, சங்கீத பூஷணம திரு. பி. சாமிநாதன் அவர்கள் கடவுள் வணக்கமும் வாழ்த்தும்பாட கூட்டம் இனிது முடிந்தது. அதுபோழ்து அடுத்த ஜூலை மாதம் 3ஆம் தேதி ஞாயிறன்று " திருமாற்பூர் " என வழங்கும் திருமாழ்பேற்றில் மாதாந்திர வழிபாட்டுக்கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

சேக்கிழார் திருநாளும், சீர்காழி ஸ்ரீ சட்டைநாதர் பிரசாதம் வழங்கும் விழாவும்

சென்னைத் தியாகராயநகரிலுள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலைய மன்றத்தில் 30—5—60 திங்கட்கிழமை மாலை 7-மணிக்கு சேக்கிழார் சுவாமிகள் குரு பூசை விழா நடைபெற்றது. அவ்வமயம் சீர்காழி தேவஸ்

தானத்தில் எழுந்தருளி அருள் பிரசாதம் வழங்கும் ஸ்ரீ முத்துச் சட்டைநாதசுவாமிக்கு 27—5—60 அன்று சிறப்பு வழிபாடு நிகழ்த்தப்பெற்ற அருட் பிரசாதம் வழங்கும் விழாவும் நடைபெற்றது. ஷை விழாவிற்குத் தலைமைவகித்த திரு. கீ. இராமலிங்க முதலியார் அவர்கள் பேசுகையில் எங்கும் யுத்த பயம் சூழ்ந்திருக்கும் நேரத்தில் மக்கள் ஆண்டவனை வணங்கி அன்புடையவர்களாக வாழ வேண்டுமென்றும், அன்பு நெறியை வளர்ப்பதற்கு அடியார்கள் வரலாறு துணைசெய்யும் என்றும் கூறினார்கள். தருமையாதீனத்தைச் சார்ந்த ஸ்ரீ முத்துச்சட்டைநாதருக்கு 27—5—60 அன்று சிறப்பு வழிபாடு செய்யப்பெற்ற அருட் பிரசாதங்களைச் சென்னையிலுள்ள மக்களும் பெற்று பயனுற வேண்டுமென்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் திருவுளங்கொண்டு இவ்விழா நடைபெறுவது சென்னை மக்களின் பெரும் பாக்கியம் என்றும், இம்மாதிரி விழாக்களில் மக்கள் கலந்துகொள்ள வேண்டுமென்றும் கூறினார்கள்.

பிறகு பேசிய கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் பெரிய புராணத்தை அருளிச்செய்த சேக்கிழார் பெருமான் வரலாற்றினையும், பெரிய புராணத்திலுள்ள சில செய்யுட்களின் இயற்கை வர்ணனைகளைப் பற்றியும் விரிவாகக் கூறினார்கள். திருஞானசம்பந்தர் அவதரித்த ஸ்தலம் சீகாழி என்றும், சம்பந்தர் அருளிய தேவாரம் 68ம், அப்பர், சுந்தரர் பாடிய திருப்பதிகங்கள் 3ம் அத்தலத்திற்கு உள்ளன என்றும் கூறினார்கள்.

இத்தகைய பெருமை பொருந்திய தலத்தில் மலைக்கோயில் மீது எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சட்டைநாதருக்கு 27—5—60 வெள்ளிக்கிழமை அர்த்தயாமத்தில் நடைபெற்ற சிறப்புப் பூசை வழிபாட்டின் பிரசாதங்கள் இவ்விழாவிற்கு வந்திருந்த அன்பர்கட்கு வழங்கப்பட்டது.

விழா ஆரம்பத்தில் பிரார்த்தனை வழிபாடு நிகழ்ந்தது. நிலையத் தேவார மாணவ, மாணவியர்கள் சீகாழித் தேவார பதிகங்களில் சிலவற்றைப் பாராயணம் செய்தார்கள்.

கடைசியாக நிலையத்தின் சார்பில் நன்றி கூற, கடவுள் வாழ்த்துடன் விழா இனிது முடிவுற்றது.

குருபூஜைப் பிரசாதம் வழங்கும் விழா

திருக்கயிலை அடியவர்கட்கு வரவேற்பு விழா

16—5—60 திங்கட்கிழமை தருமபுர ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா மிக்க சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. 18—5—60 புதன்கிழமை மாலை 6 மணிக்கு குருபூஜைப் பிரசாதம் வழங்கும் விழா நிகழ்ந்தது.

அன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கயிலாயத் தரிசனத்திற்கு எழுந்தருளியபோது உடன் சென்று உதவிய 108 ஸ்ரீ சுவாமி வித்யானந்த சரசுவதி அவர்கட்கும், முந்நூற்றெழுபத்தைந்து முறைகளுக்கு மேலாகத் திருக்கயிலை மலையை வலம்வந்த மௌனிபாபா என வழங்கும் ஸ்ரீமத் சுவாமி முக்தானந்தா அவர்கட்கும் ஒரு வரவேற்பு விழா நிகழ்ந்தது. வரவேற்புரையும் வாசித்தளிக்கப்பெற்றது.

விழாவிற்குத் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை B. A., L. T., அவர்கள் தலைமை வகித்தார்கள். திரு. கீ. இராமலிங்க முதலியார் M. A., அவர்கள், திரு. ச. சிவகுமாரன் M. A., அவர்கள், வித்துவான், திரு. கி. வா. ஜகந்நாதன் M. A., அவர்கள், திரு. N. R. முருகவேள் M. A., M. O. L., அவர்கள் ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்தினார்கள். விழா சிறப்புற நிகழ்ந்தது. நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. P. சுவாமிநாத முதலியார் அவர்கள் கடவுள் வணக்கம் பாடினார். வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரை நன்றியுரை முதலியன கூறி விழாவைச் சிறப்புற நடத்தினார்கள்.

பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், திரு. செ. செல்லப்ப முதலியார், பாடியது.

நீராலழியு மனையைப் பிடித்த நெருப்பு மின்னு
ரோராலழியு மிளங் காளையர் நெஞ்ச மேற்ற மன்னர்
தாராலழியு மிளைத்தா ரரணஞ் சகோதரர் தம்
போராலழியுங் குடும்ப முற்று மறி போற்றுருடியே.

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம், பிரம்மஸ்ரீ. கே. முத்துஜோதிடர் அவர்கள்,
திருவிடைமருதூர்.

(சார்வரிஹு ஆனிமீ 1உ முதல் 32உ முடிய)
(14—6—60 முதல் 15—7—60 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

அசுவதி 1, 2 பாதங்கள் சுபந்தரும். இடம் மாறும். தொழில் ஓங்கும். அசுவதி 3, 4, பரணி முதல்பாதமும் இல்லறம் ஓங்கும். வித்யாவிருத்தியாகும். கடன்நீங்கிச் சுகம் உண்டாகும். பரணி 2, 3, 4, கார்த்திகை முதல்பாதம் வியாதியை உண்டுபண்ணும். சத்ருபாதையும் தேவகோபமும் ஓங்கும். சுபமிராது. திங்கள், புதன் சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி - மிருகசீர்ஷம் $\frac{1}{2}$

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் உத்தியோக விருத்தியும், வித்யா அபிவிருத்தியும், ஆரோக்கியமும், நல்ல மேதையும், உண்டுபண்ணும். ரோகிணி 4 பாதங்கள் மிஸ்ரமாய் நடக்கும். ஆரோக்கியக் குறைவும், வரவுக்கு மிஞ்சின செலவும், குடும்பத் தொல்லையும் உண்டுபண்ணும். மிருகசீரிஷம் 1, 2 பாதங்கள் ஆரோக்கியத்தைத்தரும், தொழில் ஓங்கும், வித்யாவிருத்தியாகும். புதன், வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் $\frac{1}{2}$, திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிருகசீரிஷம் 3, 4 பாதங்கள் சுபசந்தோஷத்தைத்தரும். ஆடை ஆபரணங்கள் சேரும். இல்லற சுகம் கிடைக்கும். திருவாதிரை நான்குபாதங்களும் வியாதி பயம் நீங்கித் தொழில் லாபம் ஏற்படும். இல்லறம் ஓங்கும். கடன் நீங்கிச் சுபமுண்டாகும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் அடிக்கடி இடம் மாறச் செய்யும். அலைச்சலைக் கொடுக்கும். குடும்பம் ஓங்கும். சத்ருபாதை நீங்கும். விவகாரம் வெற்றி அடையும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

கடகராசி ஒன்பது பாதங்களும் சுபசந்தோஷங்களையும் விவகார வெற்றியையும் தந்து அசாத்தியமெலாம் சுலபமாகச் சாதித்துக் கொடுக்கும். உத்தியோக விருத்தி, கிரகநிர்மாணம், கிரயவிக்கிரயங்கள் எல்லாம் சுலபமாக நடக்கும். ஞாயிறு, வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் ¼

மகம் நான்கு பாதங்களும் உத்தியோக உயர்வைத்தரும். மேலோர், பெரியோர் அன்பு கிட்டும். பூரம் நான்கு பாதங் களும் வீண் அலைச்சல்களை உண்டுபண்ணும். வரவுக்கு மிஞ்சின செலவு ஏற்படும். குடும்பத் தொல்லைகள் அதிகமாகும். உத்திரம் முதல்பாதம் உயர்பதவி வியவகார வெற்றி, பந்து மித்ர சேர்க்கை முதலிய சுபங்களைத்தரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் ¾, ஹஸ்தம் - சித்திரை ½

உத்திரம் 2, 3, 4 பாதங்களும் உத்தியோக உயர்வையும், கீர்த்திபத்திரத்தையும், மேலோர் பெரியோர் அன்புகளையும், அதிகப் பொறுப்பையும் தரும். ஹஸ்தம் நான்கு பாதங்களும் இராஜாங்கமூலம் பல எதிர்பாராத நன்மைகளைத்தரும். தெய் வீகம் ஓங்கும். நண்பர்களுக்கும் அன்பர்களுக்கும் உபகரிக் கும் தன்மையால் கீர்த்தி ஓங்கும். சுபசோபனாதி வைபவங் களும் இல்லற சுகமும் விசேஷமாய்த்தரும். சித்திரை 1, 2 பாதங்கள் புத்திராதிகளால் மேன்மை உண்டுபண்ணும். கிரய விக்கிரயங்கள் ஏற்படச் செய்யும். வியாதியும் கடனும் நீங்கி சுபமுண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

7. துலாம். சித்திரை ½, சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் விசேஷமான நன்மைகளை உண்டு பண்ணும். வியாபார விருத்தியைத் தரும். நூதன கூட்டுத் தொழில் ஏற்படச்செய்யும். செய்காரியங்கள் யாவும் ஜெயிக்கும். நஷ்டதனபிராப்தி ஏற்படச்செய்யும். கீர்த்தியும் உலகப்பிரசித்தி யும் ஏற்படும். ஆரோக்கியமும், தெய்வபலமும் உண்டாகும். சனி, செவ்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

விசாகம் 4-ம் பாதமும், அனுஷம் நான்கு பாதங்களும், அதிகமான உழைப்பைத்தரும். கிரகபூமி லாபங்கள் ஏற்படும். குடும்ப சுகம் ஓங்கும். கேட்டை நான்கு பாதங்களும் உத்தி யோக உயர்வைத் தரும். ஆரோக்கியமும், கிரக சுகமும் ஏற்படச்செய்யும். மேலோர் பெரியோர் அன்புகிட்டும். புதன், வியாழன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் நான்கு பாதங்களும் பயத்திலிருந்து விடுவிக்கச் செய்யும் பூராடம் நான்கு பாதங்களும், உத்திராடம் முதல் பாதமும் புத்திராதிகளால் சுகம். நஷ்ட தன வரத்து, ஆரோக்கியம், பந்துமித்ர கல்யாண வைபவங்கள், காலிகன்று சேர்க்கை, தொழில் ஓங்குதல் முதலிய சுபமுண்டாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$.

மகராராசி 9 பாதங்களும் உத்தியோக உயர்வையும், ஸ்திர ஜீவனத்தையும் தரும். கீர்த்திப் பத்திரம் கிடைக்கும். கிரக சுகமும், சுபசோபன கல்யாண வைபவங்களும், சுகவாசமும் தரும். மனம் சாந்தி அடையும். தெய்வபலம் முன் நிற்கும். அசாத்யமாக நினைத்ததெல்லாம் சாத்தியமாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

அவிட்டம் 3, 4 பாதங்கள் சுபத்தைத் தரும். வஸ்தி ராபரணச் சேர்க்கைகளையும், சந்தோஷத்தையும் உண்டு பண்ணும். சதயம் நான்கு பாதங்களும் தூரபிரயாணத்தைத் தரும். அந்நிய தேசத்திலிருந்து சமாசாரம் வரும். பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள் சுகாதிகளைத் தந்து மனம் சந்தோஷம் அடையச்செய்யும். இல்லற சுகம் ஓங்கும். எல்லாம் பிரதி கூலமில்லாமல் அனுகூலமாக நடக்கச்செய்யும். சனி, செவ்வாய் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் தெய்வீக சக்தியால் ஜெயத்தையும் சந்தோஷத்தையும் என்றும் கண்டிராத சுகபோகங்களேயும் தரும். ஜீவனலாபங்களையும், சந்தோஷத்தையும் உண்டு பண்ணும். சதா தெய்வ சிந்தனையாகவே இருக்கச்செய்யும் வியாழன், வெள்ளி சுபமாகும்

குறிப்பு :- ஷை மாதம் உலகப்போக்கில் இயற்கை கோளாறுகளாலும், திவ்யோத்பாதங்களாலும், காடுமலைப் பிரதேசங்களும், மேற்கு சமுத்திர தீரங்களும் பாதிக்கப்படும். ப்ராசீன தர்ம ரக்ஷணத்தாலும், தெய்வீக பலத்தாலும் ஷை தோஷங்கள் வராமல் தடுக்கலாம். கடவுள் முன் நின்று காப்பாராக.



மாயூரம் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வாரவழிபாட்டுக் கழகத்தினரின்

வாரவழிபாடு

மாயூரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் வாரவழிபாட்டுக் கழகத்தின் வார வழிபாடு 15—6—60. 22—5—60 ஆகிய நாட்களில் திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான தருமபுரம் ஸ்ரீ தருமபுரீசுவரர் திருக்கோவிலிலும் ஸ்ரீ காசிவிசுவநாத சுவாமி திருக்கோவிலிலும் நடைபெற்றது. 29—5—60 அன்று திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான மாயூரம் ஸ்ரீ ஐயாறப்பர் சுவாமி திருக்கோயிலிலும், 5—6—60 அன்று மாயூரம் பாலக்கரை ஸ்ரீ விசுவநாத சுவாமி திருக்கோயிலிலும் நடைபெற்றது.

மதிப்புரை

நீதிநெறி விளக்கம்

(ஆங்கிலத்துடன்)

மூலமும் உரையும்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடு. உரையாசிரியர் ;- திருமுறைக்கலைஞர், வித்துவான், திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார் (தலைமைத் தமிழாசிரியர், போன்னையா உயர்பள்ளி, திருச்சிராப் பள்ளி) விலை ந. பை, 55. பக்கங்கள் 132.

கிடைக்குமிடம் :- தலைமை ஆசிரியர் ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, ஸ்ரீ வைகுண்டம் P. O. திருநெல்வேலி

திருப்பனந்தாள் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் புரிந்துவரும் பேரறக் கட்டளைகள் பல. அவை புத்தகம், அன்னம்பாலிப்பு திருப்பதிகக் கல்வெட்டு, சமயம், சமுதாயம் முதலிய பல துறைகளில் பயன் விளைக்கின்றன. அவற்றில் ஒன்ருக இந்நூல் ஆதிகுமரகுருபர சுவாமிகள் 272ஆம் ஆண்டு மாகேசுவரபூசை நினைவு மலராக வெளிவருகிறது.

உரையாசிரியர் அவர்கள் எளிய நடையில் பதவுரை, கருத்து, விளக்கம் முதலியவற்றை அமைத்து ஆங்காங்கே பாடபேதம் இலக்கணக் குறிப்பு இவற்றையும் காட்டியுள்ளார்கள். பாடல் களுக்குத் தனித்தனி தலைப்பு கொடுத்துப் படிப்போருக்குப்பேருதவி புரிந்துள்ளார்கள். நூல் சிறந்தமுறையில் அச்சிடப்பெற்றுள்ளது.

திருக்குறள் தொகுப்புரை வெளியிட்டருளியபின் திருக்குறளின் சாரமாகிய இந்நூலையும் வெளிட்டருளும் ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்குத் தமிழுலகம் என்னென்றும் கடமைப்பட்டுள்ளது. இந்நூலைத் தமிழர் ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெற வேண்டுகிறோம். — வி. சபேசன்.

EXTRACT FROM VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam
Vaithiswarankoil.

இன்று மாலை ஸ்ரீ தையல்நாயகி சமேத ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்துக்கு வந்து தரிசித்தோம். தரிசனம் மிகச் சிறப் பாகக் கிடைத்தது. ஆலயம் மிகச் செம்மையான முறையில் வைத் திருப்பதைக் கண்டு தருமபுர ஆதீன மகாசந்நிதானத்தைப் போற்று கின்றேன்.

(ஒ-ம்) திருநாவுக்கரசு சுவாமிகள்
தலைவர், மணிவாசக மன்றம், புதுவை.
26—1—60.



சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் (வேலூர் தேவஸ்தான இறைபணி மன்றம்) 108 ஸ்ரீ சுவாமி வித்யானந்தசரசுவதி அவர்களுக்கும் ஸ்ரீ மௌனிபாபா என வழங்கும் சுவாமி முக்தானந்தா அவர்களுக்கும் வரவேற்பு விழா

Printed & Published by K. Sundaresa Iyer, Agent Dharmapuram Adhinam at the Gnanasambandam Press Dharmapuram. (Mayuram) 10—6—60